Registered as a News paper in Ceylon ★

17 JAN 1972 UNDERS... LIBRARY

விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




மலர் 13 | துவஸ்கம் 28 | தை 2 | ஞாயிற்றுக்கிழமை | (16—1—72) | இதழ் 336

# முன்னர் சொன்னதை பீலிக்ஸ் நேற்று நிறைவேற்றினர்!

## அரைமணி நேரம் தமிழில் பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழில் பேசுவேன் என்று சில காலத்துக்கு முன்பு பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்துறை அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறியிருந்ததை பலரும் ஆச்சரியப்படும் விதத்தில் நேற்று நிறைவேற்றி பாராட்டைப் பெற்றார்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை கிராமச்சங்கத் தலைவர்கள் மகாநாட்டிலேயே திரு. பீலிக்ஸ் அழகாகத் தமிழில் பேசிப் பாராட்டைப் பெற்றார்.

"தலைவர் அவர்களே, நகரமுதல்வர் அவர்களே" என்று தமது பேச்சை ஆரம்பித்த திரு. பண்டாரநாயக்கா "இங்குதான் முதலில் நான் தமிழில் பேசுகிறேன், பிழைகள் இருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றுவேண்டுகோளும் விடுத்தார்.

பின்னர் சுமார் அரைமணி நேரம் குறிப்பு எதையும் பார்க்காமலே தடங்கலின்றி இந்நிந்தச் சிந்தித்துத் தமது உரையை தமிழில்நிகழ்த்தி முடித்தார்.

உதவி அமைச்சரும், அகில இலங்கை கிராமசபைத்தலைவர்கள் சங்க தலைவருமான திரு. விக்கிரமசிங்க தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை நகர மண்டப வாசலில் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மாலைசூட்டி வரவேற்றார். அவரைத் தொடர்ந்து திரு. விக்கிரமநாயக்கா, கமிஷனர் திரு. எ. ரி. சுந்தரம் மாலைசூட்டினார்கள். மேயர் உறுப்பினர்களை அமைச்சருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. தியாகராசா வந்திருந்தார்.



## நிதி ஒதுக்கீட்டில் புதிய நடைமுறை

"வருகின்ற வருடம் ஜனத்தொகை, நிலப்பரப்பு, வருமானம் ஆகியவற்றைக் கவனித்து நிதி வழங்கப்படும்" பிற்போக்கான பகுதிகளுக்கு நிதி அளிக்கப்படும். வட்டாரத்தின் பிரகாரம் நிதி கொடுப்பது நல்ல முறையல்ல. ஏனென்றால் மக்கள் குறைவான ஒரு கிராமசபை தேவையில்லாத வட்டாரத்தை நியமித்து கூடிய நிதிபெறக்கூடும்" என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் பீலிக்ஸ் மேலும்கூறியதாவது: கிராமசபைக்கு புதிய வருமானம் பற்றி டாக்டர் என். எம். பெரேராவும் நானும் பரிசோதனை செய்து வருகிறோம். சொக்ஸி கமிஷன் அறிக்கை வி. சி. ஜெயசூரியா கமிஷன் அறிக்கையும், பிரசுரிக்கப்படவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த அறிக்கைமூலம் கிராமசபைக்கு போதியநிதி கிடைக்கும்.

கிராமசபை ஊழியர்பற்றி வி. பி. ஏ. பெரேரா கமிட்டி அறிக்கை மக்கள் அறியும்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை மந்திரிசபை ஏற்றுக்கொண்டால், இராமசபை ஊழியர், மத்திய அரசாங்க ஊழியர் சம்பள அளவில் சமமாக நடத்தப்படுவர். இந் நடைமுறைக்குவரச் சிலகாலம் செல்லும். இதைத் தடுக்க முடியாது.

இன்றுதான் நான் முதல் முறையாக தமிழில் பேசுகிறேன். பிழைவிட்டால் நீங்கள் மன்னிக்கவேண்டும். கிராமசபை ஆட்சிமுறையை

(12-ம் பக்கம் பார்க்க)

## பலாலியில் மந்திரிக்கு அமோக வரவேற்பு

மாவிட்டபுரம், சனி

வடபகுதிக்கு முதல் தடவையாக விஜயம் மேற்கொண்ட பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவுக்கு பலாலி விமான நிலையத்தில் இன்று அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இன்றுகாலை 8-30 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய அமைச்சருக்கு முதலில் யாழ் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா மலர்மாலைசூட்டிவரவேற்றார். மயிலிட்டி கிராமசபைத்தலைவர் திரு. கே. ரி. இராசதுரை அடுத்து மாலைசூட்டினார். இதையடுத்து அகில இலங்கை கிராமசபைகளின் தலைவர்கள் சங்கத்தலைவரும், உள்ளசப் பிரயாணத்துறை உதவி அமைச்சருமான திரு. விக்கிரமசிங்கா மலர்மாலைசூட்டி வரவேற்றார். இதையடுத்து பல பிரமுகர்களும் உத்தியோகத்தர்களும் மலர்மாலை சூட்டினார்கள். வலிவடக்குப்பகுதி 22 கிராம சேவையாளர்களும் கிராமச்சங்கத் தலைவர்களும் அணிஅணியாக நின்று வரவேற்றனர்.

விமானநிலையத்தில் அமைக்கப்பட்ட சிறாத்துக்குமுன் வைத்து வலி-வடக்குக் காரியாதிகாரி பி. எச் பற்றிக் மாலைசூட்டி அமைச்சரை வரவேற்றார்.

தொடர்ந்து அரசாங்க அதிகாரிகளும், உள்ளூராட்சி மன்றத்தலைவர்களும், கிராமசேவையாளர்களும் அமைச்சருக்கு அறிமுகம் செய்யப்பட்டனர்.

இவ்வரவேற்பில் நல்லூர் எம் பி திரு அருளம்பலம்,

(12-ம் பக்கம் பார்க்க)

## தினசரி சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுமாலை யாழ் திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற 14-வது தினசரி சுவீப் முடிவுகள் வருமாறு:-

தலா ரூ. 5.000 பெறும் 5 முதல்பரிசுகள்

06 L 0284   11 H 0972
10 E 0913   06 S 0384
09 N 0081

தலா ரூ. 2,000 பெறும் 7 இரண்டாவது பரிசுகள்:-

04 X 0435   09 R 0026

(12ம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் நாட்டில் முதலாவது பெண் அரசி

கோப்பன்ஹேகன் ஜன. 15

டென்மார்க் மன்னர் பெடரிக் காலமானதைத் தொடர்ந்து அவரது புதல்வி ராணி மார்கரெட் இன்று மகாராணியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

31 வயதான ராணி மார்கரெட் மூன்று பெண் பிள்ளைகளின் தாயாவார். டென்மார்க்கில் பெண் ஒருவர் பட்டத்துக்கு வருவது இதுவேமுதல்தடவை என்று கருதப்படுகின்றது. மரபுப் பிரகாரம் மன்னர் இறப்புக்கு பின்னர் ராணி மார்கரெட் பதவிக்கு வந்தபோதிலும் முடிசூட்டுவிழா எதுவும் நடைபெறமாட்டாது என்று தெரிகின்றது.

மன்னர் பெடரிக் சில காலமாகவே படுத்த படுக்கையாக இருந்துவந்தார். காலமான மன்னரின் பூதவுடல் கிறிஸ்டியன்போர்க் தேவாலயத்தில் மக்கள் பார்வைக்காக இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு



# இலங்கையும்... பங்ளாதேசமும்

[பங்ளாதேசத்தை இலங்கை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கை இங்கு பலப்பட்டுவருகிறது. யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலே தமிழரசுக்கட்சியின் ஆதரவில் நடைபெற்ற ஒருபொதுக் கூட்டத்தில் இவ்வித தீர்மானம் நிறைவேறியது.

முதலில் இதுபற்றிய கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடைக்கவில்லை, பின்னர் அரசாங்கம் மனம் மாறி கூட்டத்திற்கு அனுமதியளித்தது. அரசாங்கம் இதற்கு முற்றிலும் எதிராக இருந்திருப்பின் இக்கூட்டத்துக்கு இந்த 'அவசரகாலத்தில்' அனுமதி அளிக்காமல் இருந்திருக்கலாம். இவ்விஷயமாக அரசாங்கக் கட்சிகளிடையே கருத்துவேற்றுமை இருப்பதால் திட்டமான முடிவு செய்யத்தயங்குவது இயற்கையே. பங்ளாதேசத்தை இது வரை ஒரு சில நாடுகள் அங்கீகரித்துள்ளன. அந்நாடுகளுடன் பாகிஸ்தான் தன் அரசியல் உறவை உடன் துண்டித்துள்ளது. பங்ளாதேசத்தை அங்கீகரிக்கவேண்டாமென்று அதிபர் பூட்டோ கேட்டுக்கொண்டுள்ளார். லங்கையும் இச்சமயம் பங்ளாதேசத்தை அங்கீகரிக்குமாயின் பாகிஸ்தான் இலங்கையுடனும் அரசியல் உறவுகளைத்துண்டிக்கும். பாகிஸ்தானை விரோதித்துக் கொள்ளத் தயாரில்லாததே இலங்கை இவ் விஷயமாகத் தயங்குவதற்கு முக்கிய காரணமாகும்.

*இன்றைய சங்கடமான நிலையில் இப்பிரச்சினையை முதுபெரும் அரசியல் ஞானியான ஸ்ரீ க. சிவசுப்பிரமணியம் இக்கட்டுரையில் ஆராய்கிறார்.*]

**க. சிவசுப்பிரமணியம்**

அண்டையிலுள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் அடங்கிய உபகண்டத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை உலக அரசியலையே பாதித்துள்ளது. இலங்கை மிகவும் சமீபத்தில் உள்ளதால் நம் நாடும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது இயற்கை. சங்கடங்கள் இருப்பினும், அரசாங்கமும் நம் நாட்டு மக்களும் இதைத் திருப்திகரமாகத் தீர்மானிக்கவேண்டும். இதுபற்றிய சில முக்கிய விஷயங்களையும், தற்போதைய உண்மை நிலைமையும் எதிர்காலத்தைக் குறித்து விருப்பு வெறுப்பின்றியும் கவனிப்பின், இலங்கை தன் நலனுக்கும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் சர்வதேச அமைதிக்கும் நல்லெண்ணத்துக்கும் மேலான முறையில் காரியம்செய்ய முடியும்.

இதுபற்றிக் கீழ்க்கண்ட சில விஷயங்களைக் கவனிப்போம்.

1. உபகண்டத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய கிழக்கு வங்காள நிலைமைபற்றியது. இப்போதைய இந்திய, பாகிஸ்தான் குடியரசுகள் ஒரு நாடாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருந்தன. பங்ளாதேசமென்பது கிழக்குப் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறுகையில் வங்காளம் பிரிக்கப்பட்டு, மேற்குப் பகுதி இந்தியாவையும் கிழக்குப்பகுதி பாகிஸ்தானையும் சேர்ந்தன.

2. பல நூற்றுண்டுகளுக்கு முன்பாக சிங்கள சமூகத்தவருக்கு வங்காளத்துடன் மிக நெருங்கிய தொடர்புண்டு. இளவரசர் விஜயா வங்காளத்திலிருந்தே இலங்கைக்கு வந்தனர்.

3. இந்திய தேசிய சரித்திரத்தில் பிரிக்கப்படாத வங்காளம் மிக முக்கியமான காரியங்களைச் செய்துள்ளன. இந்திய மறுமலர்ச்சிக்கு வங்காளத்தின் முயற்சி பெருமளவு வழிகாட்டியுள்ளது. இலங்கையின் தேசிய இயக்கத்துக்கும் ஆரம்பத்தில் வங்காளம் பெரும் உதவிபுரிந்துள்ளது.

4. கல்கத்தா பல்கலைக்கழகம், டாக்டர் ரவீந்திரநாத் தாகூரின் விஸ்வபாரதி பல்கலைக்கழகம் இவை நமது கலாசார முன்னேற்றத்துக்கு உதவி, சேர் பாரன் ஜயதிலகா, சேர் டபிள்யு துரைசாமி முதலிய தலைவர்களையும் நமக்கு அளித்தன. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் இவை இலங்கை மக்களின் சமயகலாசார வாழ்வுக்குப் பெரிதும் உதவின.

5. மேலும், இந்திய விடுதலை இயக்கம், இந்தியா, பாகிஸ்தான் குடியரசுகளுக்கு மட்டுமன்றி இலங்கையின் விடுதலைக்கும் உதவியுள்ளது. மகாத்மா காந்தி, காயிதே ஆஜம் ஜின்னா இவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தை உருவாக்கியதுடன் அவ்விருவரும், மற்றோர் பெரிய தலைவரான ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலேயின் சிஷ்யர்களென்பது குறிப்பிடத்தக்கது. மகாத்மாவும், ஜனாப் ஜின்னாவும், இரு சமூகங்களுக்கும் தொண்டாற்றினர். பின்னர் இருவருக்கும், அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் துரதிருஷ்டவசமாக வேற்றுமைகள் ஏற்பட்டன. அவ்வித வேற்றுமை ஏற்படுவது சரித்திரத்தில் சகஜமே.

6. ஜனாப் ஜின்னா கராச்சியில் பிறந்தவர். பம்பாயில் வாழ்ந்தவர். என்றாலும் அவரது பாகிஸ்தான் கட்சிக்குத் தக்கான பெரும் ஆதரவை வங்காள முஸ்லிம்களே அளித்தனர். அவர்களில் பெரும்பாலோர் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தான் கிளர்ச்சியில் கிழக்கு வங்காளமே ஜனாப் ஜின்னாவுக்கு உறுதுணையாக நின்றது.

7. பின்னர் துரதிருஷ்டவசமாக பாகிஸ்தானின் மேற்குப் பகுதியினருக்கும் கிழக்குப் பகுதியினருக்கும் வேற்றுமைகள் வளர்ந்தன. இந்து, முஸ்லிம்களிடையே வேற்றுமைகள் ஏற்பட்டு பிரிந்ததுபோல்.

8. பாகிஸ்தானின் மேற்கு கிழக்குப்பகுதிகளுக்குள் ஏற்பட்ட தகராறு இந்தியாவின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் ஆபத்து ஏற்படுத்தியதால், இந்திய குடியரசு அரசாங்கம் இதில் தலையிட்டு ஒரு கோடி அகதிகளை கிழக்கு வங்காளத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டியதாயிற்று. மிகவும் நெருங்கிய தொடர்புள்ள இந்தியா, சர்வதேசியத்தில் செல்வமாகிய பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் தலைமையில் குறுக்கிட்டது நல்லதே. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், வேறு யாரும் குறுக்கிடாமல், கிழக்கு வங்காள மக்களை இந்தியாவே காக்க நேரிட்டது மிகவும் நல்லது. சொந்த நாட்டிலேயே அவர்கள் துன்புறுத்தப் பட்டதை நீடித்து அனுமதிக்க முடியாதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

9. பாகிஸ்தானின் கிழக்குப்பகுதி மேற்குப்பகுதியை விடச் சிறியதாகும். ஆனால் ஜனத்தொகையில் கிழக்குப் பகுதி பெரியது. மேற்கைவிட கிழக்குப்பகுதியில் இயற்கைச் செல்வமும் அதிகமாம்.

10. ஜனாப் ஜின்னாவின் தலைமையில் இந்தியாவை இரண்டாக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் கேட்டதுபோல், ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையில் கிழக்குவங்கமக்கள் பாகிஸ்தானை இரண்டாக்க வேண்டுமென்று கேட்டனர். நெருக்கடி ஏற்பட்டது. கிழக்குப் பாகிஸ்தான் மக்களை இராணுவம் தாக்கியது. ஆகவே அந்த ஆட்சியிலிருந்து விடுபட கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் எல்லா முயற்சிகளும் செய்தனர்.

11. ஒரு சுதந்திர தனிஅரசாங்கம், கிழக்குப்பாகிஸ்தானில் "பங்ளாதேசம்" என்ற பெயரில் ஏற்பட்டுள்ளது.

12. இலங்கையின் மக்களும் அரசாங்கமும், இந்த நிலையில், இப்புதிய அரசாங்கத்தை கண்ணியமாகவும் தாமதிக்காமலும் அங்கீகரிப்பதைத்தவிர வேறு மாற்று வழி இல்லை.

(தொடரும்)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[ஞாயிறு 16—1—72]

காலை 6-15 நாதாஞ்சலி 6-20 சைவநற்சிந்தனை. ஆறுமுகநாவலர் 6-25 கிறிஸ்தவநற்சிந்தனை. - சகி. கலாநிதி ஜேம்ஸ் மேதர். 7-00 பௌத்த நற்சிந்தனை. சகி. தம்ம ரதன தேரோ. 7-05 துதிப்பாடல், 7-30 குரல் வகை, 7-45 மெல்லிசைப் பாடல்கள். பாடுபவர்கள்: என். புவனேஸ்வரி, என். சரஸ்வதி தேவி 8-00 தமிழோடிசைப் பாடல். நடத்துபவர் ந. சண்முகரத்தினம். 8-15 சைவ சமயப் பேச்சு, மாட்டுப் பொங்கல் - ஆத்ம நாத சர்மா 8-30 சைவநீதி. 9-00 அரங்கேற்றம் 9-30 நூறுல் இஸ்லாம். 10-00 தொழிலாளர் வேளை தயாரிப்பு: வி. பி. தியாகராசா 10-30 பெண்ணுலகம் நடத்துபவர் சற்சொரூபவதிநாதன் 11-00 அதிதி தயாரித்தளிப்பவர் ந. சிவராசா 11-15 சிறுவர் மலர் நடத்துபவர்: வானொலிமாமா.

6-10 வாத்திய இசை 6-15 மெல்லிசைப் பாடல். 6-30 வயலின், 7-00 கதம்ப நிகழ்ச்சி, 7-30 செய்திகள். 7-35 உரைச் சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 நாடக விருந்து, 9-50 பாட்டு.

## அழிவற்ற மோனநிலையில்தான்...



உனக்குச் சுதந்திரமுள்ளவரை செயலாலும், சொல்வன்மையாலும், அறிவாற்றலாலும் துணைபுரியும் எத்தக் கருவிகளாலும் உன்போரை நடத்துவாயாக; உன்பகைவர் உனக்குத் தளையிட்டு இருட்டறையில் உன்னை அடைத்தாலென்ன, நீ பேசாவண்ணம் உனக்கு வாய்ப் பூட்டுப் போட்டாலென்ன, அமைதியாய் எல்லாவற்றையும் முற்றுகைபோடும் உன் ஆன்ம சக்திகொண்டும், எதையும் கடந்துதிரியும் மாபெரும் மனத் திண்மையைக்கொண்டும் உன் சமரை நடத்துவாயாக. நீ மடிந்தாலும் ஆண்டவனிடமிருந்து உன்னிடத்திற் பாய்ந்த அகிலத்தையே களைக்கும் வான்சக்திகொண்டு எதிர்த்துப் போராடுவாய்.

மலைக்குகையிலோ, வரையுச்சியிலோ உறையும் ஒரு துறவியைக் கல்லினை செயலற்ற ஒரு சோம்பேறியெனக் கருதுகின்றாயா? அவரைப்பற்றி யாது அறிவாய்? அவருடைய நிட்சலத்திலிருந்து எழும் வெள்ளமாம் சக்தி உலகத்தில் எங்கும் பெருக்கெடுத்துப் பாயலாம் அல்லது அவரது ஆன்ம நிலையின் வலிவால் இவ்வையகமே மாறிவிடக்கூடும்.

கலையுச்சிகளில் வாழும் முக்தியடைந்த சான்றோர் தன்னுடைய ஆன்மாவில் கண்ட பெருங்கனவைத்தான் வீரர்களும், வருங்காலம் உரைக்கும் ஞானிகளும் தோன்றி இப் புற உலகத்தில் முழக்கி நிறைவேற்றுகின்றார்கள்.

சூழ்நிலையைப்பொறுத்தவரையில் பிரம்மஞானச் சபையினர் தவறு இழைத்திருக்கலாம். ஆனால் உண்மையில் அவர்கள் கூறும் கருத்தில் பிழையில்லை. இமயத்தில் வாழ்ந்த ஒரு மகாத்மா கடவுளைத் தியானிக்குங்கால் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் இம்மூன்றைப்பற்றியும் அவர் கனவுகண்டார் அக்காரணம்பற்றியே பிரஞ்சுப் புரட்சி வெடித்து எழுந்தது என அவர்கள் கூறுகின்றார்கள்.

அழிவற்ற மோன நிலையில் உருவாகிறதால் சொல்லும் செயலும் வருகின்றன.

ஸ்ரீ அரவிந்தர்

Limited Copies Available

**Tamil Culture in Ceylon**

by

M. D. Raghavan

Price Rs. 20/-

Eelanadu Ltd. Jaffna.

# நன்றிக்கு ஒரு பொங்கல்!

தை பிறந்து விட்டது. மனை எல்லாம் பொங்கல் பொங்குகிறது. மக்கள் மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்கி மிளிர்கிறது.

மனைதோறும் பால் பொங்கவும், தமிழ் மக்கள் மனமெல்லாம் மகிழ்ச்சிப் பொங்கல் வழியவும் காரணகர்த்தாவாய் இருப்பது பசுவும், எருதுவுமாகும். இன்றுமட்டுமல்ல பண்டைக்காலம் தொட்டு பசு, எருதுகள் தமிழர் வாழ்வில் பெரும் பங்கு கொண்டுள்ளன.

## ஆநிரை கவர்தல்

ஒரு நாட்டரசன் இன்னொரு நாட்டரசனோடு யுத்தம் செய்ய ஆரம்பிக்குமுன் யுத்தத்திற்கு அறிகுறியாக அந்நாட்டிலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்து செல்வான். கவர்ந்த ஆநிரைகளை அவற்றுக்கு உரித்தான அரசன் சண்டையிட்டு மீட்டுக் கொண்டு வருவான். இப்படி ஆநிரைகளைக் கவரும்போது அவைகளின் மேல் பகைமை உணர்ச்சியைக் காட்டாமல் மிகப்பக்குவமாக கவர்ந்து அழைத்துச் செல்வான். இதனைப் 'புறப்பொருள் வெண்பா மாலை' என்ற நூலில் பரக்கக் காணலாம். பகையரசனது நாட்டில் கவர்வதற்கு எத்தனையோ பொருட்கள் இருந்தும் ஆநிரையைக் கவர்வதன் நோக்கம் என்ன?

## தலைசிறந்த செல்வம்

ஒரு நாட்டின் தலைசிறந்த செல்வம் ஆநிரைகளாயிருப்பதனாலும், அவற்றைத் தெய்வத்துக்கு சமமாக அரசனும் குடிகளும் போற்றுவதனாலும் அவர்கள் கண்ணே போற் காத்துவரும் ஆநிரைகளைக் கவர்ந்து பகைமை கொள்கிறான். ஆநிரைகளைப் பறிகொடுத்த அரசனும் கோபாவேசம் கொண்டு பகை அரசனோடு யுத்தம் செய்து தனது ஆநிரைகளை மீட்டு வருகிறான்.

## தன்னலமில்லாச் சேவை

ஆநிரைகளுக்குத் தமிழர்கள் இவ்வளவு மகத்துவம் அளிப்பதற்குக் காரணம் அவைகளின் தன்னலமில்லாச் சேவை என்றுதான் கூற வேண்டும். வெறும் இலை, குழை, புல் ஆகியவற்றைச் சாப்பிட்டு அமுதினுமினிய பாலைத் தருகிறது. எருதுகள்

**விமலா**

நெல் மணிகள் விளைவதற்குத் தம் இரத்தத்தை வேர்வையாய்ப் பிழிந்து கொடுத்து வெறும் சக்கையாகிய வைக்கோலைத் தமக்கு உணவாகக் கொள்கின்றன. இவ்வளவு பெருந்தியாக சீலர்களும் இவைகளுக்குப் பேசத்தெரிந்துவிட்டால் மனிதனைவிட மேலாகிவிடும். மிகப் பழங்காலத்தில் இவை பேசும் பாக்கியத்தைப் பெற்றிருந்ததாக ஓர் ஐதிகக் கதையுண்டு.

## பேசத்தெரியுமானால்...

ஒரு கமக்காரன் பசு ஒன்றை அன்போடு வளர்த்து வந்தான் என்றும், ஒருநாள் இவன் அதற்கு நீர் வைக்கும் போது அது அழுததாம். "எதற்கு அழுகிறாய் நான் தானே உனக்கு வயிறு நிறைய சாப்பாடு தருகிறேனே" என்றானாம். அப்போது அந்தப் பசு, நாளைக்கு நீ இறந்துவிடுவாய். அதன்பின் யார் எனக்கு சாப்பாடு போடப் போகிறார்கள் என்றதாம். நான் சாகாமல் இருக்க என்ன வழி என்று கமக்காரன் கேட்கவும் பசு நாளைக்கு யமன் உன் உயிரை எடுக்க வரும்போது நீ உன்னைச் சுற்றிவர அன்னத்தைப் படைத்து வைத்துக்கொண்டு இருந்தால் யமன் அன்னத்தைக் கடந்து வரமாட்டான். நீ உயிர் தப்பிவிடலாம் என்று யோசனை சொல்லிக் கொடுத்தது.

கமக்காரனும் பசுவின் யோசனைப்படி அடுத்தநாள் அன்னத்தைச் சுற்றிவரப் படைத்து அதன் மத்தியில் இருந்துகொண்டான். கமக்காரனின் உயிரைக் கவர்ந்து செல்லவந்த யமன் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று இறைவனிடம் முறையிட்டதாகவும் பசுவுக்குப் பேசத் தெரிந்தமையால் தானே அவனுக்குத் தெரியாதவற்றைச் சொல்லிக் கொடுத்துவிட்டது. ஆகையால் அவற்றைப் பேசாதபடி செய்யவேண்டுமென எண்ணி அவற்றின் மேல்வாய்ப்பற்களை இல்லாமற்செய்துவிட்டதாக கதை சொல்வார்கள். எது எப்படியிருந்தாலும் இவைகள் இந்தக் காலத்தில் பேசுமாயிருந்தால் மனிதன் என்னை மாடாக நடத்துகிறான் என்று கூறுமா அல்லது எனது சேவைக்கு நன்றிக்கடன் செலுத்துகிறான் என்று கூறுமா?

## சமயம் கூறும்

ஒருவன் ரொம்பப் பிரயாசைப்பட்டால் "அவன் மாடாக உழைக்கிறான்" என்கிறோம். எனவே, இக் கால்நடைகளின் உழைப்பு இன்றி ஒன்றும் நடைபெறாது. சைவசமயிகளுக்கு இடபமும் பாலித்து



அவர்களை ஆட்கொள்ள எழுந்தருளியிருக்கும் பரமசிவன்-பார்வதி அம்மையின் வாகனம் இடபம். சைவக் கோயில்கள் எல்லாவற்றிலும் பலிபீடத்திற்குமுன் நந்திபீடமுள்ளதை அவதானித்திருப்பீர்கள். வேய்ங்குழல் இசைக்கும் கண்ணனின் உற்றதோழர்கள் என்பதனாலும் இவற்றின் பெருமை உயர்கிறது.

## நன்றிக்கடன்

இவ்வளவு பெருமையும் சிறப்பும் மிக்கது என்பதற்காக மட்டுமல்ல, தமிழனுடைய வாழ்வுக்கு வேண்டிய உணவுப்பயிர்களை வளர்க்க பெரிதும் உதவும் இவைகளின் சேவையைக் கருதி அவற்றுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முறையில் தமிழனின் தனிப்பெருந்திருநாளாகிய தைப்பொங்கல் தினத்திற்கு மறுதினம் 'பட்டிப் பொங்கல்' என்று கூறப்படும் மாட்டுப்பொங்[கல்] ... பாகச் செய்கிறான். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவன் குறள்வழி வந்த தமிழன் செய்ந்நன்றி மறவாமல் மாட்டுப்பொங்கல் பொங்குகிறான்.

சத்துமிகுந்த செந்நெல் மணியை மனிதனுக்கு தந்து சக்கையாகிய வைக்கோலைத் தன துணவாக்கிக் கொள்ளும் இக்கால்நடைகளின் சேவையைப் பண்டைநாள் ... உணர்ந்த தமிழ்மகன் நன்றிப் பெருக்கோடு அவற்றுக்குப் பூசை செய்து விழா எடுத்து வருகிறான். இதனைத் தனது நன்றியாக கடமையாகக் கொண்டு இருக்கிறான். தொன்று தொட்டு வந்த இந்த வழக்கம் இன்றும், தைப்பொங்கலுக்கு மறுநாள் பட்டிப்பொங்கலாக பாவிக்கிறான். தமிழர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

# மாறி வரும் இசை உலகில்....

டிசம்பர் பிற்பகுதியிலிருந்து ஜனவரி முற்பகுதி வரை தமிழகத்திலுள்ள கர்நாடக சங்கீத வித்வான்களுக்கும் வித்வாம்சினிகளுக்கும் பெரிய பரபரப்பான காலம். ரசிகர்களுக்குத் தித்திப்பான காலம், சங்கீத சபை நிர்வாகிகளுக்குச் சங்கடமான காலம். வித்வான்கள் கச்சேரிகளுக்கு அழைப்பு வருமோ வராதோ என்றும், வந்தால் எந்தராகங்களையும் உருப்படிகளையும் பாடலாமென்றும், யார் யாரைப் பக்கவாத்தியமாய் அமர்த்தலாமென்றும். சாரீரம் கட்டிக்கொள்ளாமலிருக்கும்படி சாவதானமாயிருக்க வேண்டுமென்றும் பரபரப்படைவார்கள். ரசிகர்கள் தினமும் நாதவெள்ளத்தில் மூழ்கி மூழ்கி இசையின்பம் துய்ப்பார்கள். சபை நிர்வாகிகளெல்லாம் புரோகிராமின்படி நடக்கவேண்டுமென்று அங்கலாய்த்துத் துடிப்பார்கள்.

## சங்கீத சீஸன்

'சங்கீதசீஸன்' என்றழைக்கப்படும் இந்தக்காலம் பிரதிவருடமும் இந்நாட்களில் வருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்தில் இந்நாட்களெல்லாம் அநேகமாய் விடுமுறை நாட்களாயிருந்தன. சென்னையிலுள்ள சங்கீதசபை நிர்வாகிகளுக்கும் ரசிகர்களுக்கும் இது ஒவ்வான நேரம். இசை விழா சென்னையில் முடிந்தவுடனே திருவையாற்றில் தியாகராஜ உற்சவம் ஆரம்பித்துவிடும். வித்வான்களும் ரசிகர்களும் மூட்டை முடிச்சுகளுடன் திருவையாற்றிலுள்ள காவிரி ஆற்றங்கரையில் முகாம்போட்டு விடுவார்கள். இசை விழாவில் பெரும்பாலும் தரமுள்ளவர்களுக்குமட்டுமே இடம் கிடைக்கும். பகலும் இரவும் தொடர்ந்துநடக்கும் தியாகராஜ ஆராதனையில் பல இளம் வித்வான்களுக்கு "சான்ஸ்" கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

வரவர இசைபயிலும் வித்வான்களின் தொகையும் அவர்களைக்கேட்டு மகிழும் ரசிகர்களின் தொகையும் அதிகரித்துவருகிறது. இதன் காரணமாக இசைவிழாக்கள் இம்முறை டிசம்பர் 19-ந் திகதியே ஆரம்பித்துவிட்டன. தியாகராஜஉற்சவமும் இம்முறை ஐந்துநாட்களுக்கு நடைபெற்றது.

அரசாங்கத் தடைகளாலும் வேறு வசதியீனங்களாலும் இந்தியாவுக்கு நேரில் சென்று இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டும் கண்டும் ஆனந்தமடையமுடியாத இலங்கையருக்கு வழக்கம்போல வானொலி ஓரளவுக்காயினும் உதவிபுரிந்தது. வானொலி அலைகளை எவரும் தடைசெய்ய முடியாது. இந்திய வானொலியார் இவ்விரண்டு மாபெரும் நிகழ்ச்சிகளையும் தங்களால் இயன்றளவுக்கு அஞ்சல் செய்தார்கள். ஆயினும் ஒரு திறமான கச்சேரியை இடைநடுவில் நிறுத்திவிடும்போது, இவற்றிற்கென ஒரு தனி அலைவரிசையை அமைத்து தொடர்ச்சியாக அஞ்சல் செய்யமாட்டார்களா என்று தோன்றியது.

**வி. என். பி.**

★ வரவேற்கவேண்டிய சில மாறுதல்கள் தரும் மகிழ்ச்சி

★ வேண்டாத மாற்றம், ஊடுருவல் தரும் வேதனை

## புதிய சங்கீத சந்ததி

சங்கீதஉலகில் பழையசந்ததி போன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோக புதிய சந்ததி ஒன்று அந்த இடத்துக்கு வந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். புதிய சந்ததியுடன் சங்கீதத்தில் புதியதொரு பத்ததியும் பிறக்கிறது 'புதியபாணிகள் தோன்றுகின்றன' பாலமுரளி கிருஷ்ணா, வீணை பாலசந்தர், எம். டி. ராமநாதன் முதலிய வித்வான்கள் பல புதிய, புரட்சிகரமான (சில வருடங்களுக்கு முன்பு சாஸ்திரவிரோதமெனக் கருதப்பட்ட) உத்திகளையும் நடைகளையும் கையாளுகிறார்கள். இது தவிர்க்கமுடியாதது. ஆனால் வரவேற்கக்கூடியது போலத் தோன்றும் ஒரு மாறுதல் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

## வேதனை

இதற்குமாறாக வேறுசிலர், முன்னுக்குவர முயற்சிப்பவர்கள், புதிய முறைகளைப் புகுத்துகிறோமென்று நினைத்துக்கொண்டு, எல்லாவிதமான அங்கீகரிக்கப்பட்ட பாணிகளுக்கும் புறம்பான ஒருபாணியில் ராகஆலாபனையிலும் உருப்படிகளின் சங்கதியிலும் வேண்டாத மாற்றங்களைச் செய்வது விரும்பத்தக்கதல்ல. சமீபத்தில் புகழ்பெற்ற ஒரு நாகசின்ன சகோதரர்கள் சங்கராபரணத்திலுள்ள ஒரு பெரிய தியாகராஜகீர்த்தனத்தில் முழுக்க முழுக்க நவரஸ கன்னட தொனிக்கும்படி வாசித்ததைக் கேட்க மிகவும் வேதனையாயிருந்தது.

## ஊடுருவல்

இக்காலத்தில் ஒருவர் வீட்டில் இருந்தாலும், தெருவில் நடந்து போனாலும், எந்த மூலையில் போய் ஒளித்துக் கொண்டாலும் சினிமா சங்கீதம் அவரைத் தொடர்ந்து கலைத்துப் பிடித்துவிடுகிறது. அவர் கொஞ்சம் சுத்த சங்கீதம் தெரிந்தவராயின் அது அவரையும் பழுதாக்கி விடுகிறது. அவர் கொஞ்சம் சங்கீதம் தெரிந்தவராயின் அது அவரையும் பழுதாக்கி விடுகிறது. எவரையும் அறியாமலே இந்த ஊடுருவல் நடக்கிறது. இதனால் என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ தெரியவில்லை.

## ஷேக்

ஷேக் சின்ன மௌலானா சாகிப் அரும்பாடுபட்டு முன்னேறிவந்து இன்றைய நாதஸ்வர உலகில் நிகரற்ற வித்வானாய் விளங்குவதைச் சகலரும் மதித்து ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டார். ஆந்திராவில் பிறந்த இந்த முஸ்லிம் கர்நாடக சங்கீதப் பிரியர்கள் எல்லோரையும் பிரமிக்கச்செய்து, வைதீகர்கள் தமது ஆற்றலை அங்கீகரிக்கும்படி செய்துவிட்டார். சங்கீதம் என்பது சாதி. மதம். நிறம் என்ற குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட அற்புதமான சக்தி. இசைவிழா, தியாகராஜஉற்சவம் இரண்டிலும் ஷேக் ரசிகர்களைக் கொள்ளை கொண்டார்.

மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன், ராதா ஜெயலக்ஷ்மி, கே. வி. நாராயணஸ்வாமி முதலிய பாடகர்களும், டி. என். கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன், கோவிந்தசாமி நாயக்கர் முதலிய வயலின் வித்துவான்களும், மதராஸ் கண்ணன், கோயமுத்தூர் ராமஸ்வாமி, தஞ்சாவூர் ராமமூர்த்தி முதலிய மிருதங்க வித்துவான்களும் இன்னும் நூற்றுக்கணக்கான இதர வித்வான்களும் இந்த சுமார் இருபது நாட்களாக தமது கைவரிசைகளை வாரிவாரி வழங்கினார்கள்.

# யாழிசையிலே உதய கன்னியும் சந்திரிகையும்!

அ. செ. மு.

செடி கொடி மரம் மட்டை அத்தனையும் வசந்த காலப் பறவைகளின் பாட்டிசையிலே மெய்மறந்து நிற்கின்றன. கோவில் மிழாக்களிலே கொஞ்சும் திருதங்கமும் நாதசிலம்பும் கேட்டு அவைபுத்தெழுச்சியும் புதுமைஉணர்ச்சியும் சுப்பிப்புளகாங்கிதம் கொள்கின்றன; வண்ணம் வண்ணமான சூரிய ஒளிக்கதிர்களையும் காணமுடியாத இசையின் ஒளிக்கதிர்களையும் பார்க்க உண்டு. அதேவண்ணம் வண்ணமாக அழகு காட்டி ஆடக்காட்டி இனியன கட்டி முன்னம்கட்டி சோலை மலரொளியாகத் தீபமிழாக் கொண்டாடப் பழமை கொழித்துக்கிடக்கின்றன. அதோ அந்த தென்னை இளங் கன்று பத்திநிற்கும் குங்கும

## ஜீவபூமி

வர்ணச் செவ்விளநீர்க்காய் களைப் பாருங்கள் என்ன அழகு! ஒவ்வொன்றும் நம திரு இக்சுவைப்பானம் வார் வழங்கும் அமுத கலசங்களாகத் திகழ்கின்றன. புன் னங்களைப் பாருங்கள் கோடி செம்பொன்குறுநகைகாட்டி மகிழ்விக்கிறது. ஒன்று குபீரெனமலர்ந்து கல கலவென நகைத்து வரவேற்கிறது. மற்றொன்று இரத்த வர்ணம் தோய்ந்த செவ்வரத்தை, மனமோகினி ரோஜாக்கள், குமிழ் இதிப்புச் செவ்வந்தி, கோமதி தாமரையாள் புனிதகதுளசி கன்னியராகி, இரசமெல்லியராகி கன்னிகைமாகி நிலவினிலாடிக்களித்து நிற்கும் இவ்வனிதையர் சூழவிலே காவிபூண்டு பரம்பொருளை அண்மித்துநிற்கும் காசி விசாலாட்சி சுந்தரியின், கானவர்த்தனி சமி அகிதாம்பிகை கல்யாணி... சாந்தி... நீலாம்பிகை...

அறிவகானங்கள் உமன் ற ஆனந்தமாக ஒருசேர்ந்தன நம்மைச் சூழப் புதுவாழ்வு- ஒருபுது உலகத்தை சுவர்க்கமோகத் தோற்றி மறைந்து ஆண்டும் யுகமும் வளர்ந்துகொண்டே செல்கிறது. காலதேவனையின் கிரமம் தவறுத 'ஐதி'யிலே இளவேனில் முதுவேனில் கார்கூதிர் முன்பனி பின்பனி அக்கணம் உக்கமும் என்றெல்லாம் காலச்சக்கரம் கிர்ரெனச் சுழன்றோடிப்போகிறது.

### யாழ் இசையிலே

நாள் மலர்கிறது- பாணன் மீட்டும் யாழின் நரம்பிலே உதயமும் உச்சியும் மாலையும் இரவும் ஒன்றையொன்று துரத்திக்கொண்டே சுற்றுவந்து குரவையாடிச் சோபனம் கொட்டுகின்றன பாணனின் யாழிசையிலே.

"ஐயா பாணரே! உங்கள் யாழின் நரம்பிலா என்னை அழைக்கும் அந்த இன்னிசையும் இசை நாதமும் பிறந்தன! ஓடோடி வந்தேனே உமது யாழோசைகேட்டு!" என்றாள் மனஉவகை முகத்திலே பூக்க பாணனை அணுகும் உதயநங்கை.

"யாழ் உதயவேனியா வா வா! உன்வரவைத்தானே பார்த்திருந்தேன் பாணன் நான் மீட்டிய யாழின் ஓசையிலா உன் உயிர் கலந்தது" "ஆ வா! அதனைக்கேட்டுத் தானா இருள் நிரைகிழித்துக் கொண்டு ஓடிவந்தாய்? அதிசயம் அதிசயம் நின்வருகை கண்டு யாழின் நரம்புகள் எப்படிக்குதிக்கின்றன பார்! அசைந்துகொள் வா! என் னுடனிருந்து கொள். என்கூட நடந்து வா. நின்றுவிடாதே பின்னிடாதே ஜீவயாத்திரை ஆரம்பமாகிவிட்டது!" உதய வேனியை அவன் கைத்தலம் பற்றி வரவேற்பான்பாணன்

### உதய கன்னி

"பாணரே அற்புதமானது உங்கள் இசை! அதோ பட்டுக் கள் நூறு ஆயிரமாகப் பறவைகள் வட்டமிட கடலிலே மிதந்து அசைகின்றன. அலைகடல் தன்னகத்தே மகிழ்ச்சி கொந்தளிக்க எப்படி வரவேற்கிறது பார்! தேசனிலே ஏர் சுமந்து வயல் களம் நோக்கி வீரநடைபோடும் தீரர்களைப் பாரும்! அதோ அதோ... கைவப்போங்கள் பாணரே! உங்கள் கூடநடக்கும் ஆற்றல் இலேன் யாழின் நரம்பினிலேகூட உங்கள் நடையின் வேகம் அதே துரிதகதி...! கன்னியின்கிசும்பல் நடந்தோடிவர உதய குமாரி! அழகானது உன் நடை!" என்பான் பாணன் குழையும் நாணெனிபிக உன்நடையின் பவனமிடுக்கிலும் கிரமகதியிலும் யாழின் நரம்புகள் கதறுவதைப்பார் கேள்! பாடிவரும் அருவியையும், ஆடிவரும் நதியையும் உன் கால்களின் அசைவு தெல்லாய் மரகதப்பச்சை வயல்களிலே தலைவணங்கி ஆட்டம்போடும் நெற்கதிர், மொட்டவிழும் மலர்கள்' திங்குரலெடுத்துப்பாடும்

## வசந்தமல்லிகை—5

கிளே பார்க்கிறேனடி உதயா நீ ஓய்ந்துவிட்டாயா - என் யாத்திரையும் நின்றுவிடும்" பாணனின் இறக்கம். ஐய யாழிசைப் பாண எங்கள் யாத்திரைப் பாதையிலே நாம் கடந்து வந்த நெடு வழியே தோன்றும் புதுமை எழிச்சி... அதோ பார்ப்ப பறவை இனம், மணியோசையைத் தொடர்ந்து ஓடிச் செல்லும் பள்ளிச்சிறுவர்.

"வேணு நாம் வந்த பாதையைத் திரும்பிப்பார்த்துவிட்டாய் இனி அதற்கு மேல் ஓர் அடிகூட எடுத்துவைக்கமாட்டாய் எழுந்திரடி கண்ணே!" 'இனிமேலும் உங்களைத் தொடர்ந்தவரா என்னால் ஆகாது பாணு! உன்யாழின் எழும்ஓசை எனக்கு மயக்கமேதருகிறது. உன்கூட நெடுந்தூரம்வந்துவிட்டேன் மனதில் ஏதோ கலக்கம். நான் போகிறேன், பாணா!"

நாள் மடிகிறது - யாழிசையிலே.

'அடி உதயகுமாரி நில்... நில்! போகாதே'

"அதோ-- அவள்'

'நீ யார் புதியவளே?'

சந்திரிகை ஐயா பாணரே! உங்கள் யாழிசை இத்தகு வசியம்பெற்றதென்று முதல் ஏழ்கடல் தாண்டி ஆடிவா வந்துக்கொப்பால் சாந்துறை ந்தஎன்னை உங்கள் யாழின் எழுந்த இசையானது மந்திர சக்தியின் மாவலிமையுடனே உங்கள் முன் கொணர்ந்து நிறுத்திவிட்டதே!'

'ஓ! சந்திரிகையா வா வா! என் யாழின் நரம்பினிலே பிறந்தவெண்ணிலவுப்பெண்ணரசி நாதவடிவழகி, என் இதயதேவி! அதோ நின் தாரகைகள் கண்சிமிட்டி அழைக்கின்றன! பிரபஞ்சம் நீ பொழியும் அமுத தாரையில் உன் அருள் கண்ணே

(8ம் பக்கம் பார்க்க)



சிறுகதை

# 53-ல் திருமணமா?

‘ஜிக். என்று சுற்றாடல் முழுவதுமேகுளிர்ந்துபோயிருந்தது. சிற்றுண்டிச் சாலையின் கண்ணாடியினூடாக, பனி அப்பிரதேசம் முழுவதையுமே போர்த்திருந்தது வெளிவாகத் தெரிந்தது. பனியின் வீழ்ச்சி வீதம் கூடப்போவதை உணர்ந்த மக்களின் நடையிலே ஒரு சுறுசுறுப்பு. இன்னும் சொற்ப நேரத்தில் வானிலை எப்படி மாறும் என்றே தெரியாத ஒரு குழப்பமான நிலை காணப்பட்டது. அப்பப்பா! என்ன குளிர். மனிதனையே கொன்றுவிடும் குளிர். மார்கழி மாதம் என்றால் இங்கு இந்த உயிர் போக்கும் குளிருக்குப் பஞ்சமே இல்லை. என் தாய்நாட்டில், இந் நேரம் கரைபுரண்டு வெள்ளம்பாயும் காலம். என்னும் இப்படி உயிரைக் கொல்லும் குளிராக இருக்காதே என்று சிந்தித்த வண்ணம் என் சேலையைச் சரி செய்ததுடன், கம்பளிச் சேட்டினையும் இறுக்கமாக இழுத்துக் கொண்டேன்.

சிற்றுண்டிச் சாலையின் பணிப்பெண் ஒரு மென்னகையுடன் ‘இலங்கைத் தேநீர்’ என்று கூறி, சில திண்பண்டங்களையும் வைத்துச் சென்றாள். ‘எதிர்வரும் 10,15 நிமிடங்களுக்குப் பனிப் புயலுடன் கூடிய பனி மழை பெய்யும்’ என்று அப்பிரதேசத்தின் வானொலி அறிவித்தது.

‘தப்பினேன்பிழைத்தேன்’ என்று ஓர் ஆங்கிலப் பெண்மணி இளைக்க, இளைக்க வந்து சேர்ந்தாள் - என் மேசைக்கு. சிற்றுண்டிச் சாலையில் திடீர் என்று ஒரு பரபரப்பு, ஏதாவது ஒரு கதிரை கிடைத்தாற்போதும் என்று பலரும் விரைந்தனர். பனிப் புயலுக்குத் தப்பினோம் என்ற திருப்தி அவர்களின் முகத்தில் பிரதிபலித்தது.

“நீங்கள் இலங்கையரல்லவா” என்றாள் அந்த ஆங்கில மாது. ‘ஆம்’ என்று என் தலை அசைந்தது. எப்படி இலங்கையர் என்று தெரிந்து கொண்டாள், என்ற வியந்த வண்ணம் அவளை என் சிந்தனையில் பாராக இருக்குமென்று நிலை நிறுத்தத் தெண்டித்தேன். 35-38 வயது இருக்கும், என் வயதினள் ஆனால் வெள்ளைத் தோலும், நீல விழிகளும் செந்நிறத் தலைமயிருமாக அழகாக இருந்தாள். ஆண்டவனின் படைப்பின் விசித்திரத்தை வியந்து கொண்டு, சூடான தேநீர் சில்லிட்டுக் கொள்வதற்குமுன் அருந்திக் கொண்டேன். அவள் மதுபானம் அருந்தினாள். நான் தேநீர் அருந்தினேன். நம்மில் எத்தனை வேறுபாடுகள்தான் உள்ளன என்று சிந்தித்தேன்.

‘நேற்றுப் பணம் மாற்றும் விடயமாக எங்கள் கந்தோருக்கு வந்திருந்தீர்களே பட்டுத் துணியில் உடை அணிந்து அழகாக இருந்தீர்கள் என்றாள் விண்டா என்னும் அவ் வாங்கிலேயப் பெண். என் நன்றியைத் தெரிவித்து விட்டு என் ஞாபக சக்தியின் பலவீனத்தை உணர்ந்து வெட்கினேன்.

‘அவரைக் காணோம்’ என்று சலித்துக் கொண்டாள். அவளது இடது கைவிரலின் மேல் என் கண்கள் தாவுவதை உணர்ந்த அவள், ‘ஒரு கிழமையில்தான் திருமணம் நடக்க இருக்கிறது. தற்சமயம் திருமண ஒழுங்குகளைச் செய்வதில் மூழ்கியிருக்கின்றோம்’ என்றாள். எம் நாட்டில் ஊதற்பெருந்தாலும் பெற்றோர்களின் பராமரிப்பு, தலையீடு, கொண்டு நடத்துதல் என்பவை எவரின் எதிர்ப்பேச்சும் இன்றி நடைபெறும். இந்த நம் காரியத்தை தாமே ஓரளவு செய்கிறார்கள். எத்தனை கொள்கை வித்தியாசம்தான் இவர்களுக்கும் நமக்கும் என்று வியந்தேன்.

40 வயதினை நோக்கி விரையும் இவளுக்கு என்ன திருமணம் என்று யோசித்தேனே ஒழிய, என் இதழ்கள் மென்னகையைச் சிந்த மறக்கவில்லை. ஒரு இளைஞன் எம்மை நோக்கி வந்தான். விண்டாவும் அவனும் சந்தித்தார்கள். புன்னகைகள், முத்தங்கள், கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பிரிந்து சென்றார்கள். விண்டா திரும்பவும் என் மேசைக்கு வந்தாள்.

“பார்த்தீரா, அவர்தான் என் வருங்காலக் கணவன். மேல்மாடியில் ஏதோ அவசர வேலையாம்; 10 நிமிடத்தில் வருவார்’, என்று கூறி முடிப்பதற்கு முன்பே, என் இதயம் ‘டபக், டபக்’ என்று பிழைப்பட்டுக் கொண்டது. ‘என்ன மனிதர் இவர்கள், பெடியனைப்போல இருக்கிறானே அவன்; இவளுக்கு 53 வயதாயின் அவனுக்கு 10 வயதாகுதல் வித்தியாசம் இருக்காதா என்று அங்கலாய்த்தேன்.

மனத்தின் கண் உள்ளது என் புறக்கண் வழியாகத் தெரிந்துவிட்டது. என் சங்கடத்தை எப்படிப் புரிந்தாளோ தெரியவில்லை. ‘மிஸ் எனக்கும் அவருக்கும் அதிக வயது வித்தியாசம் இல்லையே. எனக்கு53, அவருக்கு 41’ என்றாள். அட ராமா! இது என்ன கொடுமையென்று என் மனம் இடிந்து நொறுங்கிக்கொண்டிருந்தது. கடமைக்குக்கூட புன்னகைக்க முடியாமல், வரண்ட நாவை ஈரப்படுத்திக் கொண்டேன். இப்படியும் ஒரு பண்பாடா.

“ஏன் உங்களைப் பார்த்தால், அதிர்ச்சியடைந்துவிட்டீர்கள் போல்தோன்றுகிறதே” என்றாள் - 53 வயதுடைய வெள்ளைக்கார மணப்பெண். “ஹி... ஹி... அப்படியொன்றும் இல்லை. வயது வித்தியாசம் சொற்பம் கூடியுள்ளதே என்று யோசித்தேன்” என்று ஒரு அசட்டுப் புன்னகையைச் சிந்தி, தலையை இல்லையென்னும் பாவனையில் அசைத்தேன். என் தலைகூட விறைத்து விட்டது போலும். வலம் இடமாகக்கூட அசைவதற்கு மறந்துவிட்டது. ‘அதிர்ச்சி’ என்றாளே, அதைவிட வேறு ஏதாவது ஒரு சொல்லிருந்தால், அது கூடுதலாகப் பொருந்தியிருக்கும்.

பத்துநிமிடம்வரை மென் சுழிக்காற்று வீசிற்று. திடீர் என்று காற்றின் வேகம் வீழ்ச்சியடைந்தது. உலகமே மூச்சுவிட மறந்ததுபோன்று ஸ்தம்பித்துவிட்டு மீண்டும் காற்றுவீசியது. பனிக்கட்டிகள் அப்பிரதேசம் முழுவதுமே வேகமாகவும், கூடிய தொகையாகவும் வீழ்ந்து கொண்டே இருந்தது. பனிக் குளிர் கொடுமையிலும் ஒரு அழகு மிளிர்ந்தது. பனிக்கட்டிகள், சிறியதும் பெரியதுமான கட்டிகளாக வீழ்ந்து படிந்தன. சில உருண்டு இடம்விட்டு, இடம் அசையும் காட்சி எத்தனை அழகாக இருந்தது.

“மிஸ் உங்கள் இலங்கைப் பெண்மணி, என் சிநேகிதி, 10வயது வித்தியாசம் உடைய ஒரு இந்தியரை இளவேனிற் காலத்தில் தானே மணந்து கொண்டாள். ஆனால் உங்களைப் பார்த்தாலோ...” என்று இழுத்தாள். யாரோ ஒருத்தி செய்தாளாக்கும், அதற்கு இவள் எம் பண்பாட்டையே தவறுதலாக எடைபோட்டு விட்டாளே என்று வெந்தேன். ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பொய்யா, மெய்யா என்று விசனப்பட்டுக் கொண்டேன்.

‘உங்கள் ஊரில் இப்படியான திருமணங்கள் நடைபெறுவதில்லையா” என்று கேட்டு ஒரு புன்னகையைச் சிந்தினாள். ஆத்திரம்தான் என் மூக்குநுனியில் நின்றது. புன்னகை ஒன்றுதான் இல்லாத குறை இக்கிழவிக்கு என்று புகைந்தேன். எங்கள் நாட்டில் பென்சன் எடுக்கும் வயதில் இவர்கள் திருமணம் பதிவு செய்கிறார்கள். அடசீ! இவளை, எம் ஊர்க்காரர் கண்டால், கைதடி வயோதிபர் இல்லத்தில்தான் கொண்டுபோய் விடுவார்கள் என்று சிந்தித்துக் கொண்டே” 20 வயதுப் பெண், 25, 35 வயது ஆண் மகனைக் கட்டிக்கொள்வாள். சில சமயம் 20, 25 வயதுப் பெண், 40, 45 வயதுடைய ஆணையும் திருமணம் புரிவாள். ஆனால் இங்கு நடப்பது போன்று எதிர்மாறான திருமணங்கள் அங்கு நடக்கும் வழக்கம் அங்கும் இல்லை என்றேன். “அதேசமயம் இல்லை என்கிறீர்களே அப்படியானால் வயது கூடிய பெண் வயதில் குறைந்த ஆண்மகனைத் திருமணம் செய்கிறார்கள்தானே” என்றாள் விண்டா. “ஆமாம், ஆனால் ஒன்று, இரண்டு, அல்லது 5 வயது வித்தியாசத்தில்தான் திருமணம் செய்கிறார்கள்” என்று கூறினேன். இவர்களைப்போல் தாய், பிள்ளை மாதிரியான வயது வித்தியாசத்திலா கட்டுகிறார்கள், பார் அவளின் துணிச்சலை என்று ஆத்திரப்பட்டேன். ஆனால் என் ஆத்திரம் நியாயமற்றதாகிவிட்டது. “உங்கள் ஊரில் 25 வயதுப்பெண் 45 வயதுக்காரரை திருமணம் செய்யும் போது, 20 வயது வித்தியாசம் இருக்கிறதே அப்படியானால், ஏன் வயது கூடிய பெண், வயதில் குறைந்த ஆண்மகனைக் கட்டப்படாது” என்று சாட்டையடி அடித்தாள். தகப்பன் மகள் என்னும் வயது வித்தியாசத்தில் அங்கு திருமணங்கள் பல நடப்பதை என் மனச்சாட்சி நினைவுபடுத்தியது. எதற்கும் விட்டுக் கொடுக்காமல் ‘அந்த வழக்கம் எங்கள் பண்பாட்டில் இல்லை’ என்றேன். ‘அது என்ன புதுவிதமான பண்பாடு, வயது கூடிய ஆண்பிள்ளை, சிறியவள் திருமணம் செய்கிறாள். இதே முறையில் வயதில் ஏற்றம் காணும் பெண்கள், வயதிற் குறைந்த வாலிபர்களை மணப்பது பிழையா? இது ஒவ்வாத பண்பாடாக இருக்கிறது மிஸ் வாணி! ஒருமுறை தெளிவாகச் சிந்தியுங்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் உரிமை இல்லையா உங்கள் நாட்டில்?”

என் இதயம், கடந்த காலத்தை நினைத்தது—

என் மனம் பாரமாகக் கனத்தது. எனினும் முகத்தில் சலனத்தைக் காட்டிக்கொள்ளாது. “சம உரிமை என் நாட்டில் உண்டு” என்று ஒரு அருமையான பொய்யை அரிச்சந்திரனை நினைத்துக் கொண்டு சொன்னேன். ‘உங்கள் பெண்கள் தம்மை தாமே தாங்கிக்கொள்ளுமளவிற்கு வேலை பார்க்கிறார்கள் தானே? ஏதாவது ஒரு பகுதியில் பெண்ணுக்கு உரிமை வழங்கப்படுவதில்லையா? என்றாள். ஏதோ மிகவும் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டேனே என்று மிரண்டேன். ஆயினும் திடமாக “சில பெண்கள்தான் தொழில் செய்கிறார்கள், எத்துறையிலும் எம்நாட்டுப் பெண்களுக்கு சம உரிமை உண்டு” என்று நீட்டி முழக்கினேன். “அப்படியான ஒரு நாட்டில் உங்கள் பண்பாடு பெண்களை இப்படித் தாழ்த்துவதாயின், உங்கள் நாட்டு மக்களின் சிந்தனையில் ஏதோ பிழைபோலும்” என்று ஒரு போடுபோட்டாள் அந்த 53வயது நிரம்பிய வெள்ளைக்கார மணப்பெண்.

“5 வயது குறைந்த ஆண்மகனைத் திருமணம் செய்ய ஒப்பும் பண்பாடு, 10 வயது வித்தியாசத்திற்கு ஏன் இடம் கொடுக்க மறுக்கிறது. இது முட்டாள்தனமான கொள்கை. உங்கள் ஊர் ஒரு காட்டுமிராண்டி ஊர் போலும். உங்கள் ஊரை நினைக்கவே பயமாக இருக்கிறது” என்றாள். என் பிறந்த பூமியின் பண்பாட்டில் உள்ள சில தீமைகள் என் சிந்தனையில் பளிச்சிட்டன. சிலர் தமக்கு உகந்ததும், தமது வசதிக்கு ஏற்றதும் ஆயின் சாதி, மதம், பதவி, பணம், அந்தஸ்து வயது பார்க்க மாட்டார்கள். தமக்கு ஏதாவது ஒருவசதிக் குறைவோ, எரிச்சலோ உண்டெனின், சாதி, மதம், பண்பாடு என்பன அழிந்தொழிந்துவிட்டதாக பறைசாற்றுவார்கள். தம் குழந்தை யென்றும், உடன்பிறப் பென்றும், தம் இனம் என்றும், அயல் என்றும்பாராது, பகிரங்கமாகத் தூற்றுவார்கள்.

எம் நாட்டில் தூயகாதலுக்கும், விருப்புக்கும் இடம் என்பதே இல்லாமல், சிலரின் வாழ்க்கை அஸ்தமனமாகி விடுகிறது.

5 வயது குறைந்த ஆண் மகனை, ஒருபெண் திருமணம் செய்தால் 10 வயது வித்தியாசம் உடையவரை மணப்பது பிழையா? என்று என் மனத்தில் பெரியதோர் கேள்விக்குறி நிமிர்ந்து நின்றது.

“நீங்கள் இத்தனைகாலமும் திருமணம் செய்யவில்லையா?” என்று விண்டாவைக் கேட்டேன். ‘இல்லை’ என்று பதில் வந்தது. “இத்தனை காலமும் திருமணம்

(10-ம் பக்கம் பார்க்க)

— ‘சாருஹாசினி’ —



## நேற்று

(10)

தபாற் கந்தோருக்குப் போய்விட்டுத் திரும்பும் வழியில், சண்முகநாதன் மழைக்குள் அகப்பட்டுக்கொண்டான். நீராவியடி உபதபாற் கந்தோரிலோ, நாச்சிமார் கோவிலடி உபதபாற்கந்தோரிலோ அவனுக்குத் தேவையான இருபது ரூபா முத்திரை கிடைக்கவில்லை. கொக்குவில் கந்தோரில் கிடைத்தது.

முத்திரை வாங்கி ஒட்டிக் கையெழுத்திட்டு அனுப்பிய வேளையில் அவன் இதயம் மலர்ச்சியால் விரிந்தது. அப்பு பாவம். மாடாக உழைக்கிறார். அவருக்குத் துணையாக என் உழைப்புப் பயன்படும். மகேஸ் அக்காவிற்குக் கலியாண வயது போய்க்கொண்டிருக்கிறது. மலர்வேறு வயது வந்த பெண்ணாக இருக்கிறாள். நல்ல உடுப்போ, நகைகளோ ஏதுவுமேயில்லை. நானும் உழைத்தால் எல்லாம் செய்யலாம்.

தக் குளிர்ந்த நீரும் வார்த்திருப்பார்கள். இன்று மருந்துக்குக்கூட ஒரு பட்டைக் கொட்டிலைக் காணமுடியாது போய்விட்டது. இருமருங்கே நிறைந்த இன்று பட்டைகளாக மாறிவிட்டதால், பட்டைக் கொட்டில்களும் தேவையற்றுப் போயின. அல்லது ஐயரம்மா கூறுவதுபோல தருமசிந்தை இப்ப ஒருவருக்கும் இல்லை... இது கலிகாலம்..." தானோ?

எவ்வளவு பெரிய மரங்கள் இந்த வீதி ஓரத்தில் நிழல் பரப்பி நின்றன? இன்று எல்லாம் தறித்துவீழ்த்தப்பட்டு வீதி வெறுந்தரமாகக் கிடக்கிறது. வெய்யிலுக்கு ஒதுங்க நிழலோ, மழைக்கு ஒதுங்க கூரையோ இல்லாதுபோய் விட்டது.

மழை சொரிந்து தள்ளியது. சண்முகநாதனுக்கு கவலை பிறந்தது. ஆஸ்பத்திரியில் இருக்கும் அக்காவுக்குச் சாப்பாடு கொண்டு போகவேண்டும். நேரமாகிக்கொண்டிருக்கிறது. 'பாவம் அக்கா காலமையும் என்ன சாப்பிட்டாவோ? பட்டினிதான் கிடந்திருப்பாள் ... ...'.

வீட்டில் அம்மா சமைத்து வைத்திருப்பாள்; விரைவில் போய்ச் சாப்பாடு எடுத்துச்

வழியில்லை ...... — சோதாரி பிடிச்சவை இதை மேய்ந்திருந்தால் என்ன! இப்படி ஒழுக்குக்கை கிடக்க வேணுமே? ஆன தணிமணியோ ... ... சாப்பாடோ என்று தலைமாட்டில் துணுமுணுத்தாள் பாக்கியம். அவை கணபதிப்பிள்ளைமாஸ்டருக்குக் கேட்டன.

"என்ன பாக்கியம் சடுமைபாகப் புறுபுறுக்கிறாய். ஐயாத்துரை என்ன செய்வான் ... ...? உழைக்கிறது சாப்பிடவே போதாது ......"

"உங்களுக்குத் தெரியாது... அந்த மனுஷன் எங்களையோ மிச்சம்பிடிக்க வைக்குது—" என்று வசைபாடினாள் அவள். மாஸ்ரர் அவளை உற்றுப்பார்த்தார். பாக்கியத்தின் கவலைகளையும் ஆசைகளையும் அவர் அறிவார்'.

"இதோ பாக்கியம் ...நாம் நினைக்கிறதுபோல எதுவுமே நடந்துவிடுகிறதில்லை, வானத்திலை இருந்து கொட்டுகிற இந்த மழைநீரெல்லாம் கடலையோ, நதியையோ அடையவே விரும்புகின்றன. ஆனால் அது நடக்கிறதா? குட்டைகளிலும் சேற்று நிலங்களிலும் தேங்கிக்கிடக்கிற மழைநீர் எவ்வளவு? அளந்தது அளந்த

பரிசு நாவல்

# போராடிப் பிறந்தவர்கள்



— செங்கை ஆழியான் —

கடை ஒன்றில் ஒதுங்கி மழைக்காக ஒதுங்கிநின்ற அவன் மனம் கனவுகண்டது. ஒரு உத்தியோகத்திற்காக எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது. சாதாரண எழுதுவினைஞர் வேலைதான். எடுக்கிறசம்பளம் கொழும்பு வாழ்வில்தான் வாழவே போதாது என்பதும் பலர் கூறி அவனுக்குத்தெரியும்.

அவனுக்கு நல்ல நினைவு இருக்கிறது. அவன் சிறுபிள்ளையாக இருந்தபோது 'கிளறிக்கல்'என்றால் சமூகத்தில் மிகக் கௌரவமானதும் உயர்வானதுமான உத்தியோகமாக இருந்தது.

"மருமகன் என்னவேலை?'

"கிளறிக்கல்..."

"கிளறிக்கல் வேலை ஒன்று பாருமிகோ..."

"நீ ஒரு கிளறிக்கலா வேணும..." - என்றெல்லாம் பெருமையோடு பேசிக்கொண்ட உத்தியோகம் அது. ஆனால் இன்று 'கிளறிக்கல்' வேலைக்கு இருந்த சமூகமதிப்புக்குறைந்துதான் போய்விட்டது. முன்பு எடுத்த சம்பளம் பெரிய குடும்பமொன்றைப் பாதுகாத்து மிச்சம்பிடிக்கவும் போதுமானதாக இருந்தது. இன்று எடுக்கும் சம்பளம் ஒருவர்வாழவே போதாதுள்ளது.

மழைவிடுவதாகத் தெரியவில்லை. தூவானம் பட்டு உடுப்பெல்லாம் தெப்பமாகிவிடும்போல இருந்தது. வீதியிலபோவோர் தங்கு ஒதுங்கி நிற்கக்கூட ஒதுக்கிடமில்லை. அவன் சிறியனாக இருந்தகாலை வீதிகளில் இருந்துள்ளன. பாதசாரிகள் தங்கி இளைப்பாறுவதற்கு அப்பட்டைக் கொட்டில்கள் உதவின. சில பட்டைக்கொட்டில்களில் பானை ஒன்றுவைத்

செல்லவேண்டும். பாழாய்ப் போனமழை இன்றைக்கு என்று பொழிந்து தள்ளுகிறதே'.

வீதியில் விரைந்துபோன கார்ஒன்று வெள்ளத்தையும் சேற்றையும் வாரி அவன் மீது வீசிவிட்டு மறைந்தது. அவனுடைய உடுப்புகள் சேறாகிவிட்டன. வீட்டில் ஆஸ்பத்திரிக்கு அணிந்து கொண்டுபோகக்கூடிய வேறு உடுப்புகள் இல்லை. இனிஎன்ன செய்வது? ஏதாவது பழந்துணிகள் இல்லாமலாபோகும்.

## முதலாம் பாகம்

சண்முகநாதன் துணிந்து மழைக்குள் இறங்கி, வீடு நோக்கி ஓடினான்.

கணபதிப்பிள்ளை மாஸ்ரர் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, பாக்கியலட்சுமியைப் பார்த்துச் சிரித்தார். பாக்கியலட்சுமி அழுவாள் போலத் திண்ணையில் இருந்தாள். அவளது ஒருகை தலைக்கு முட்டாக நின்றது.

காலையில் எதுவும் சாப்பிடாமல் வெளியேறிய கணவன், பிள்ளைகளைப் பற்றியோ, ஆஸ்பத்திரியில் நோயோடு போராடும் மலரைப்பற்றியோ அவளுக்குக் கவலையில்லை. அவளுக்குத் தன்னைப்பற்றித்தான் கவலை. வெளியே பொழிந்த மழை உக்கிய கூரையூடாக வீட்டிற்குள்ளும் இறங்கிக் கொண்டிருந்தது. கறைகள் இன்னகளெல்லாம் மழைஒழுக்கு. தலைவாசல் மட்டுந்தான் தப்பியிருந்தது.

'என்னர விதிஇது ... மனிசன் நிம்மதியாக இருக்க படிதான் நடக்கும் ... நமது விதி எப்படி விதிச்சிருக்கோ அப்படித்தான் எல்லாம் நடக்கும். உள்ளதோடு திருப்திபடைய முயல வேண்டும் ...... இல்லாததை அடைய விரும்பவேணுமே தவிர, ஏங்கக்கூடாது. ஏக்கம் வாழ்க்கையைப் பழுதாக்கிப்போடும் ...'

'உங்கடை சகோதரியை விடுங்கோ ... நெடுக நெடுகக் கஷ்டப்படவேண்டும் என்று விதிஇருக்கே? இன்பமும் துன்பமும் மாறிமாறி என்றால், அது எங்கே? நான் அனுபவிக்கிறது துன்பந்தான் ...பட்டினமான காலத்தில் இருந்து என்னடைக்குச் சுகத்தைக் கண்டேன்...' மாஸ்ரர் சிரித்தார்.

'இன்பமும் துன்பமும் அவரவர் மனதில்தான் இருக்கு. பாக்கியம் ... ... வருமானக் குறைவு என்ற ஒன்றைத் தவிர உனக்கு என்னகுறை? நீ உன்னுடையே வாழ விரும்புகிறாய் —. நீ உன்னை உன்னிலும் வசதி படைத்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து இல்லாததிற்காக ஏங்குகிறாய், நீ உன்னை உன்னிலும் வசதி குறைந்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை அப்படிப் பார்க்கில் தான் உன்னிடமிருப்பது தெரியும். சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நினைத்தால் நிச்சயமாக இருக்கலாம். நமக்கு இருப்பது இவ்வளவுதான் என்று திருப்திப்பட்டால் நிம்மதி இருக்கும். நிம்மதி தான் இன்பம், பாக்கியம் ...'

அவள் மாஸ்ரரை நினைத்துப் பார்த்தாள். 'அந்த நிம்மதி எனக்குக் கிடைச்சிருக்குமோ ... ஆஹ...' அவள் சற்றுநேரம் வெளியே

(10-ம் பக்கம் பார்க்க)

# ஈழத்து…

ஒரு சமுதாய வளர்ச்சியை அளவிட முயற்சி செய்யும்போது நாம் அச் சமுதாயத்தின் சிந்தனை வளர்ச்சியை - சிந்தனையின் செயற்பாட்டை - செயற்பாட்டின் விளைவுகளை - விளைவுகளின் ஆக்க பேறுகளை, ஆற்றல்களை நிலைநிறுத்தியே முயல்கிறோம். இந்த மதிப்பீட்டில் பெருமளவு பயன் தரக்கூடியது இலக்கிய வளர்ச்சி. இலக்கிய வளர்ச்சி பல்வேறு துறை வளர்ச்சியைக் காட்டி நிற்பதோடு அந்த இலக்கியங்கள் ஆக்கப்பட்ட மொழியின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

இந்த நூற்காட்சி சுதந்தர இலங்கையில் தமிழ் இலக்கியம் பெற்ற வளர்ச்சியைப் பிரதிபலிக்கக் கூடியதாக அமைக்கப்படுகிறது. சமுதாய ரீதியிலே பார்த்தால் 1948-முதல் இன்று வரையுள்ள இலக்கியங்கள் ஒரு தொடர் வளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருப்பதைக் காணலாம். 1948-ம் ஆண்டில் நம்மை ஆண்டு வந்த அந்நிய ஏகாதிபத்திய பிரபுத்துவத்தின் பிரதிநிதிகளிடம் இருந்து உள்ளூர் நிலப் பிரபுத்துவ பணப்பைப் பிரதிநிதிகள் குழு ஒன்றிடம் ஆட்சி கைமாறியது. இவர்களது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முழுமையாக இழையோடிய தேசியப் பற்றோ எழுச்சியோ இருந்ததாக கூறுவதற்கில்லை. படிப்பறிவற்ற ஏழைகளும் சாதாரண மக்களும் புறக்கணிக்கப்பட்டார்கள். ஒரு சாதாரண மனிதன் பாராளுமன்றத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாத காலம். இக்காலத்தில் இலக்கிய எழுச்சியோ வளர்ச்சியோ ஏற்பட்டதென்று கூறுவதற்கில்லை.

### அரசியல் மாற்றம் இலக்கியத்தில்

1956-ம் ஆண்டு இலங்கையில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. பிரபுத்துவ வர்க்கத்தினர் அன்றி சாதாரண பொது மக்களும் அரசியலைப்பற்றி சிந்திக்கவும், அரசியலில் கலந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. தனிச் சிங்களக் குரலோடு பெரும்பான்மை சமூகத்திடை ஏற்பட்ட விழிப்பும் அதை எதிர்த்த அரசியல் சிந்தனையால் சிறுபான்மை மக்களிடையே அது போன்ற ஒரு விழிப்பும் ஏற்பட்டது. இரு சாரபி…

லும் இப் புத்த… சலப்பு மிகுந்… டது. ஆனால் … தேசிய உணர்… அழப்பநிறத்… கூறுவதற்கில்… சிலக் சித்தாந்… ரண மக்களு… வகுப்பினரும் … த்தில் பிரதிநி… செல்லும் வாய்… படுத்தின. இந்… திருப்பத்தோடு…

— ஆ. தேவராசன்

[நூற்காட்சி அமைப்பாளர்]

சமூக- பொரு… இக்கால இ… பிரதிபலித்தன… யோடு தமிழ்… தைப் பொறுத்…

## வாழ்த்துகிறார்
## உதவி அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இலக்கிய விழா எமது இலக்கியத்துக்கும் எழுத்தாளர்களுக்கும் பெருக்கம் தருவதாக அமையுமென்று நம்புகின்றேன்.

எழுத்தாளன் ஒரு சமூகத்தின் ஆத்ம சிந்தனையாளன். ஆத்மீகத் தொடர்புடைய இலக்கியங்கள் தான் நின்று நிலைக்குமென்பதை எமது பண்டைய இலக்கியங்கள் காட்டுகின்றன.

இன்றைய ஒவ்வொரு எழுத்தாளரும் தமது ஆத்மீகப் பண்பை வளர்த்து அதனைத் தமது ஆக்கங்களில் பிரதிபலிக்கவேண்டுமென்பதே எனது கருத்து.

இவ்விழா அந்நோக்கங்களுக்கு உறுதுணையாக நின்று ஊக்கமளிக்கவேண்டுகிறேன்.

— சி. முருகேசம்பிள்ளை,
யாழ். உதவி அரசாங்க அதிபர்.

## மட்டில்லா
## மகிழ்ச்சியடைகிறேன்

இம்மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் சாகித்திய இலக்கிய விழாவின் நினைவு மலருக்கு இச்செய்தி அனுப்புவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். விழா எடுப்பது தமிழர்களின் தனிப்பண்பு. இவ்விழா தமிழ் இலக்கியம், குறிப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கியம்பற்றியும், தமிழ்க் கலாச்சாரம்பற்றியும் மற்றவர்கள் அறிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும்.

இவ்விழா மிகவும் விரிவான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. புத்தகக் கண்காட்சி, கவியரங்கு, கருத்தரங்கு முதலியவற்றுடன், நாடகம், நடனம் இசை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற உள்ளன. இப்படி விரிவான ஒருவிழா யாழ்ப்பாணத்தில் நடப்பது இதுவே முதல் தடவையாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே இன்றையகாலகட்டம் மிகவும்முக்கிய வாய்ந்ததாகும். இக்காலகட்டத்தில் இவ்விழா நடப்பது சாலப் பொருத்தமுடையதாகும். இவ்விழா ஈழத்து இலக்கியத்தில் புதுப்பணியை வகுப்பதற்கு வழிகாட்டும். தேசிய ஒருமைப்பாட்டின் பிரதிபலிப்பாக அமையும் இவ்விழா இனிது நடைபெற இறைவனை இறைஞ்சி இச்செய்தியை முடித்துக்கொள்ளுகின்றேன்.

ஏ. நல்லைநாதன்,
யாழ். மாவட்டி உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.

யாழ்ப்பாணம்.
5 1-72.

புதிய தாக்க… டது. … ஒரு புதிய எழு… கள் உருவா… நாட்டு ஏடு… இலக்கியப் ப… இடம் கிடைக்… தால் தமிழ்நா… ஆசிரியர்கள் … இலக்காணுகின்… விளைவாக இ… இலக்கிய ஏடு… க்கி நடத்தும்… இந்நாட்டு … ளின் படைப்… வடிவில் வெளி… களும் மேற்… டன. தனிப்ப… வர் முயற்சி… இருந்தது. இ… உரிமை … அவ்வளவு … வில்லை. அதனு… கிய சிந்தனை … அளவுக்கு … நூல் … வளரவில்லை. 1956க்கு பின்… பெருந்து … கும் 1960க்கு… வெளியான நூ… லை … மாக இருந்த… கள் என்று … இல்லை. சிறு… தையும் இக்… பெரும் … தன'

1960க்கும் பி… மானவை நூ… றன. தமிழ் இ… களுக்கும் அர… தொடக்கிய… ந்த நூல்வடி… புகலை எதுக… டும் வெளி…

வட…

16-1-72 … வில் இலக்… பொருளில் … இருப்பதை … றன். இத… சிமான இ… வேண்டிய … காரணம … நம்புகிறேன்… விழா வெ…

# ...துப் படைப்புகளின் தனித் தன்மை

...யான்மை எழுத்தாளர்களி டம் பரவியது. 1960க்கு முன்பும் பின்பும் நூல்வெளி யீட்டை மறைமுகமாக ஊக் குவித்த காரணங்களில் இது வும் ஒன்று. 1960-ம் ஆண் டுக்குப்பின்னர் வெளியான நூல்களுள் தமிழ் நாவல்க ளும் முதன்மை பெறுகின் றன. இதுவே சுதந்திர இலங் கையின் தமிழ்நூல் வெளி யீட்டுக்கான சுருக்கமான பின்னணி எனலாம்.

அனுருடப் பிரச்சினைகள்

ஈழத்து இலக்கியப்படைப் ...

என்பதை யாரும் மறுக்க முடியாது பத்தொன்ப தாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கிய உலகின் - தமிழ் உலகின் தந்தை ஆறுமுக நாவலர் என்பதை வரலாற் றுசிரியர் எவரும் மறுத்து விடமுடியாது. தமிழ் மக்க ளுடைய தனித்துவத்தை யும் தேசியத்தையும் பாது காக்கவேண்டி அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதி ராகப் போர்க்கொடி தூக் கியபெருமை ஆறுமுகநாவ

லர்ச்சியின் நிலைக்களனும் வினைநிலனும் அமைந்திருப் பதும் தெளிவாகிறது நாவ லர் காலத்திலும் ஈழத்த வரை இழிவாக எண்ணும் ஒரு போக்கு தமிழ்நாட்டி லிருந்தது ஆனல் ஈழத்தின் ஆக்க பணிகளின்முன் அந் தக் காழ்ப்பு ஈடுகொடுத்து நிற்க முடியாது தலைகுனிய வேண்டி நேர்ந்தது. வர லாற்று ரீதியாகப் பார்க் கும்போது பத்தொன் பதாம் நூற்றுண்டு ஈழத் துக்கே உரியதாகின்றது.

இந்தநிலைமை நம்மவர்க்கு நினைவுகூரும் நோக்குட னேயே நாவலர் நூல்களின் காட்சி - அவர் காலத்தவர் கள் நூல்களின் காட்சி — ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்நிலை இன்று நிலவுவதாலும், இன்னும் நாம் தமிழ்நாட்டைவிட பல துறைகளில் தமிழ்மொழியை வளம்படுத்தி வருகிறோம் என்ற உண்மையை வெளிப் படுத்தவும் பத்தொன்ப தாம் நூற்றுண்டையும் இரு பதாம் நூற்றுண்டின் பிற் கூற்றையும் ஒப்புநோக்கி எடைபோட உதவும் இவ் விரண்டு காட்சிகளும் இடம் பெறச் செய்துள்ளோம். இது ஈழத்து இலக்கிய உண ர்வு செறிவடைய வழிவகுக் கும்.

தமிழ்மீது உண்மையான பற்றுதல் உடையோர் - முக் கியமாக ஆசிரியர்கள் மாண வர்கள் இந்தக் காட்சியைக் காணவரவேண்டும். இந்தச் சிறப்பு அம்சங்களை ஆசிரியர் கள் தம்மாணவர்களை அழை த்துவந்து உணர்த்தவேண் டும். எனவே, வாரீர் - வள ரும் தமிழ் காணீர்! என அழைக்கின்றோம்.

## இன்று கலாசார பேரவையின்

# தமிழ் இலக்கிய விழா

புகள் தமிழ்நாட்டு எழுத்தா ளர்களின் பரவலான பொழுதுபோக்குப் படைப் புக்களோடு அமையாமல் மனிதவாழ்க்கையின் அன்ற டப் பிரச்சினைகளை வைத்து எழுதப்பெற்றவை. ஈழத்து நாவல்கள் சில உதைத்து ஆரம்பமேயேனைத்து விமர் சிக்கத்தக்கன, சிறுகதைகள் கருத்துப் பிடிப்போடு சமூக - அரசியல் - பொருளாதார எழுச்சிக்கு வழிகோலும் வகையில் அமைந்துள்ளன கவிதைத்துறையை எடுத்துக் கொண்டாலும் நாம் பெரு மைப்படக்கூடிய வகையில் கருத்திலும், நடையிலும், அழகிலும். தமிழ்நாட்டை விட மிக முன்னேறியுள்ளோ மென்று துணிந்து கூறலாம். மொழிபெயர்ப்பு ஆராய்ச் சித் துறைகளிலும் நாம் வெகுதூரம் சென்றுவிட் டோம், தமிழ்மொழிமூலம் உயர்கல்வியிலும் வசதியை ஏற்படுத்தியதுடன், தமிழ்ப் பட்டதாரிகளை அளித்த பெருமையும் ஈழத்துக்கே உண்டு இந்தப் பின்னணி யின்ஈழத்து இலக்கிய வளர்ச் சியை எடை போடக்கூடிய வகையில் இந்த நூற்காட்சி அமைகிறது

இலக்கிய உலகின் தந்தை

இந்த நூற்காட்சியில் ஒரு அம்சமாக நாவலர் நூல்க ளும் அவர்காலத்து நூல்க ளும் காட்சிக்கு வைக்கப்படு கின்றன தமிழ் இலக்கிய வளர்ச்சியை எடுத்துக் கொண்டால் அதன் ஆரம்ப முதல் பொற்காலமும் பத் தொன்பதாம் நூற்றுண்டு

வரைச் சாரும், தமிழ்இலக் கிய மறுமலர்ச்சிக்கு - தமிழ் இலக்கியப் பாதுகாப்புக்கு வித்திட்டவர் ஆறுமுகநாவ லர் அவரது பணிகளும் அவ ரது காலத்தவர்களது பணி களும்தான் பத்தொன்ப தாம் நூற்றுண்டின் தமிழ் வரலாற்று முக்கியத்துவத் திற்கு முழுமுதற் காரணமா கின்றன இதே பணிகள் இன்னெரு வகையிற் பார்த் தால் ஈழத்து இலக்கிய

## அமைச்சரின் ஆசிச்செய்தி

உண்மையான ஈழத்துத் தமிழ்த் தேசிய இலக் கியம் மலர்வதற்கான சிறந்த சூழ்நிலை தோன்றி யுள்ள இவ்வேளையில் தமிழ் இலக்கிய விழாநடாத் தப்படுவதைக் கண்டு நான் மகிழ்வெய்துகின்றேன். இந்நாட்டில் உள்ள பெருஞ் சமுகத்தினரிடையே நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் மேலும் வளர்க்க இவ்விழா உதவுமென நம்புகின்றேன். விழா நன்கு சிறப்புறுவதாக!

(ஒப்பம்) எஸ். எஸ். குலதிலக,
கலாசார அலுவல்கள் அமைச்சர்.

16-1-1972

## நிரந்தரச்செயலாளர் வாழ்த்துகிறார்

மக்களிடையே எமது இலக்கியப் பாரம்பரியத் தைப்பற்றிய உணர்வையூட்டவும், இலக்கியத் தைத் தேசத்தின் இலட்சியங்களுடன் இணைப்ப தற்குமென்றே சாகித்திய விழாக்கள் வருடா வருடம் கொண்டாடப்படுகின்றன.

இவ்விழாவில் தேசிய ஒருமைப்பாடுபற்றி ஆரா யப்படுவதுகண்டும் அதுவே கவியரங்கப் பொரு ளாகவிருப்பது கண்டும் நான் மகிழ்ச்சியடைகின் றேன்.

விழா நன்கு சிறப்புறுவதாக!
(ஒப்பம்) நிஸ்ஸங்க விஜேரத்தின,
கலாசார அலுவல்கள் அமைச்சின்
நிரந்தரச்செயலாளர்.

## ...நிலக் கல்விப் பணிப்பாளர் வாழ்த்து

...72 நடைபெறும் தமிழ் இலக்கியவிழா ...க்கியமும் தேசிய ஒருமைப்பாடும் என்ற ...ில் ஒரு கருத்தரங்கு முக்கிய அம்சமாக ...தை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகி... இது நமது நாட்டின் வளர்ச்சிக்கு மிக ஆவ... ...து-மிக உள்ளூர்ந்த உற்சாகத்தைப் பெற ...யது. இது போன்ற நிகழ்ச்சிகள் எமது ...ர்களுக்கு மிகவும் பயன்படும் என்று நான் ...றேன்.

...வெற்றிபெற மனமார வாழ்த்துகின்றேன்!

— டபிள்யு. டி. சி. மகாதந்தில.

## இன்று நடைபெறும் விழா நிகழ்ச்சிகள்

16-1-1972 ஞாயிற்றுக்கிழமை

### காலை நிகழ்ச்சிகள்

**புத்தகக் கண்காட்சித் திறப்பு வைபவம்**

இடம்: யாழ்ப்பாண மாநகர சபை நூல் நிலையம்
நேரம்: காலை 9-00 மணி
வரவேற்புரை: திரு. டொமினிக் ஜீவா
யாழ். மேயர் திரு. அல்பிறட் துரையப்பா புத்தகக் கண்காட்சியை திறந்து வைத்துச் சொற்பொழிவு ஆற்றுவார்
நன்றியுரை: திரு. ஆ. தேவராசன்

**விழாத் திறப்பு வைபவம்**

இடம் யாழ் மாநகர சபை மண்டபம்
நேரம் மு ப 9-30 - 10-00
வரவேற்புரை: தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுத் தலைவர் கலாநிதி கா. சிவத்தம்பி

**திறப்பு வைபவம்: கலாச்சார அமைச்சர் மாண்புமிகு எஸ். எஸ். குலதிலக மங்கல விளக்கேற்றி சொற்பொழிவாற்றுதல்.**

**விழா மலர் வெயீடு**

மலர் அறிமுகம் திரு நா சோமகாந்தன்
**விழா மலரினை தபால் அமைச்சர் மாண்புமிகு செ. குமாரசூரியர் வெயிட்டு வைப்பார்**

முதற்பிரதி வாங்குபவர்; திரு. தி. ச. வரதராசன்
நன்றியுரை; (யாழ்வாணன்) நா. சண்முகநாதன்.

**கருத்தரங்கு**

இடம் யாழ் மாநகர சபை மண்டபம்
நேரம் மு ப 10-00 பி ப 11-30
பொருள் இலக்கியமும் தேசிய ஒருமைப்பாடும்
தலைவர் கலாநிதி கா. சிவத்தம்பி
உரையாற்றுவோர் திருவாளர்கள், சுப்பிரமணியம், லஷ்மணன், முருகையன், தில்லைநாதன், ஜயதிலக.

**கவியரங்கு**

இடம்: யாழ், மாநகரசபை மண்டபம்
நேரம் மு ப 11-30 - பி ப 1-00
பொருள்: தேசிய ஒருமைப்பாடு
தலைவர்: ஜனுப் எம்- எம்- சாலி
நன்றியுரை: திரு. சி தில்லைநாதன்

### மாலை நிகழ்ச்சிகள்

**யாழ் திறந்த வெளி அரங்கு: பி. ப. 5 மணி**

வரவேற்புரை:
திரு. கே, ஜி: அமரதாசா... திரு டொமினிக் ஜீவா
இலங்கைக் கலாசாரப் பேரவை இலக்கியப் பொறுப்பாளர் — விழாக் குழுச் செயலாளர்

தலைமையுரை;-
மட்டுநகர் மாநகரசபை முதல்வர் கே. தியாகராசா

பிரதம விருந்தினர் சொற்பொழிவு

1. கலாசார அமைச்சர் மாண்புமிகு குலதிக
2. தபால் அமைச்சர் மாண்புமிகு குமாரசூரியர்
3. த, ஒ. உதவி அமைச்சர் ஜனுப் மஜீது
4. க, அ. நி. காரியதரிசி நிஸ்ஸங்க விஜயரத்தின
5. யாழ் அரசாங்க அதிபர் விமல் அமரசேகர

எழுத்தாளர், கலைஞர் கௌரவம்
நிகழ்சித் தலைவர் திரு. லக்ஷ்மணன்

கௌரவிக்கப்படுவோர்

திருவாளர்கள்: (1) சி. வி. வேலுப்பிள்ளை, (2) அ. செ. முருகானந்தம், (3) ஜனுப் அப் துல் காதர் லெப்பை. (4) பெஞ்சமின் செல் வம் (5) என் கே. பத்மநாதன் (6) வி. இ. இராஜதுரை (7) 'முத்தமணி' சுப்பிரமணியம்

சேவைச் சிறப்பு மொழிவோர்

திருவாளர்கள்: (1) க. கைலாசபதி (2) வ. அ. இராசரத்தினம் (3) சி. தில்லைநாதன் (4) பொ. பூலோகசிங்கம் (5) கா. சிவத்தம்பி (6) ஜனுப் கலியா (7) வ. பொன்னம்பலம்.

**நன்றியுரை கலாநிதி க. கைலாசபதி**

**கலையரங்கு**

நேரம் 8-30

நிகழ்ச்சி அறிமுகம்: திரு. ஆர். பேரம்பலம்

1. நடனம் - திருநெல்வேலி கலைக்கோவில் அளிக்கும் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் 'நாட்டியாஞ்சலி'
2. கலைவாணர் வில்லிசைக் குழுவினர் அளிக்கும் வில்லுப்பாட்டு
3. காங்கேசன்துறை வசந்தகான சபையினர் அளிக்கும் நடிகமணி வைரமுத்துவின் பக்த நந்தனர் நாடகம்

[11-00 கலையரங்கு முடிவு]

# மலர்ந்த தையில் வழி பிறக்க.....

## மங்கையர் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்



தை பிறந்தால் வழி பிறக்கும் இது நம் எல்லோரதும் நம்பிக்கை. நேற்றுத் தை பிறந்துவிட்டது. தைத் திருநாளை யாவரும் மகிழ்ச்சியோடு கொண்டாடி வரவேற்றுள்ளோம். நமது திட்டங்கள் நமது அபிலாஷைகள் யாவையும் பூர்த்தி செய்ய அந்த 'வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையை நல்ல வழித் துணையாகக் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

வாழ்க்கைச் செலவோ மலையென முன் வந்து நிற்கிறது. பொருட்களின் விலை யானை விலை குதிரை விலையாக ஏறிக் கொண்டு போகிறது. 6 வயது வரை குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க முடியாது. அவர்கள் வீட்டோடு அடைந்துகிடக்கிறார்கள். இவை மட்டுமா? கடந்த காலத் துன்பங்கள் பிரச்னைகள் பல. இந்த அழகிய தை பிறந்து அத் திருநாளையும் வெடி கொளுத்தி, பொங்கலிட்டு பூஜை செய்து மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கக் கொண்டாடி விட்டோம். இந்த மகிழ்ச்சி நீடிக்குமா? இந்தக் கவலைகள் தீர வழி பிறக்குமா? இது அநேக அநேக குடும்பப் பெண்களின் மனக் கண் முன் பூதாகாரமெனத் தோன்றும் பெரியதொரு வினா?

ஏன் வழி பிறக்க மாட்டாது? எதற்கும் மனம் தானே காரணம். ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் தன் வருவாய்க்கு, தன் சூழ்நிலைக்கு, தன் கலாச்சாரத்துக்கு ஏற்ற திட்டங்களை திட்டிச் செயல்பட்டாளானால் மலர்ந்த தையுடன் அவள் குடும்ப வாழ்வும் மலரும் என்பதில் ஐயமில்லை.

### மறந்து விடுக

கடந்த கால துன்பங்களை, பூசல்கள் போன்ற சதா மனத்தை அரித்துக் கொண்டிருக்கும் சில நிகழ்ச்சிகளை மறப்பது எளிதல்ல. எனினும் எதிர்காலத்தில் நிறைவு பெற்று மகிழ்ச்சியாக வாழ கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்து விட வேண்டும்.

### செயற்கையான வறுமை

உள்ளதைக் கொண்டு திருப்திப்படுகிற நிலை நம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். மனத் திருப்தி என்பது இயற்கையான செல்வம். ஆடம்பரம் என்பது செயற்கையான வறுமை. ஆடம்பரமற்ற எளிய வாழ்வும் அகந்தையிலாத நடத்தையும்தான் ஒவ்வொருவருக்கும் சிறந்தது. அது உடலுக்கும் நல்லது உள்ளத்துக்கும் உகந்தது.

வீண் பொழுது போக்குதல், வம்பளத்தல் ஆகியவற்றில் நேரத்தைச் செலவு செய்வதில்லையென நாம் உறுதிபூண வேண்டும். எப்போதும் செயலாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். வேலையின்றி ஒரு போதும் இருக்கக் கூடாது. செயலற்ற சோம்பல் நிலையில் தான் கெட்ட எண்ணங்கள் உதயமாகி தீய வழியில் நம்மை இட்டுச் செல்ல முயலுகின்றன.

'மிதுனம்'

### சிக்கனம்

சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அடுத்த உறுதிப்பாடு. பொருள்களின் விலைவாசிகள் கூடிய இவ்வேளையில் வரவறிந்து திட்டம் வகுத்து செலவு செய்ய வேண்டும். தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால் சதா அதிருப்தியில் உழல நேரிடும். எளிய வாழ்வில்தான் உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியும். சிக்கனம் என்றவுடன் செலவைக் குறைத்து விட்டாற் போதாது. பணத்தை அதிகப் பயன்படும்படி செலவு செய்வதே உண்மையான சிக்கனம்.

### ஆசை எனும் நெருப்பு

அது வாங்க வேண்டும். இது வாங்க வேண்டும். தகுதிக்கு மேலாக மற்றவர்களைப் போல வாழ வேண்டும் என்ற ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும். ஆசை என்ற நெருப்புக்கு தீனி போடப் போட அந்த நெருப்பு வளர்ந்து பெருகி மேலும் கேட்கும். வறுமை கேட்பது சில பொருட்கள். செல்வம் கேட்பது பல பொருட்கள். பேராசை கேட்பதோ எல்லாவற்றையும். எனவே மனத் திருப்தியோடு வாழ உறுதி கொள்ள வேண்டும். மனத் திருப்தியைப் போன்ற சுகம், ஒழுக்கத்தைப் போன்ற ஆபரணம் ஆரோக்கியத்தைப் போன்ற லாபம் உலகில் வேறு எதுவும் கிடையாது.

### குற்றம் காணேல்

உள்ளத்தில் அமைதி காண வேண்டுமானால் மற்றவர்களிடம் குற்றம் குறைகளை காண வேண்டாம். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு கடமை உண்டு. அதனை உணர்ந்து நன்கு நிறைவேற்ற முயலுவோமானால் அதில் மனதுக்கு ஏற்படும் திருப்தியும் நிம்மதியும் வேறெதிலும் காண முடியாது.

இவற்றைக் கருத்தில் கொண்டு செயல் கொண்டால் நம் ஒவ்வொருவருக்கும் மலர்ந்த தையில் நல்ல வழி பிறக்கும். அறம், அன்பு, வாய்மை, பொறுமை இந் நான்கும் மாண்பான வாழ்வுக்கு நான்கு தூண்கள் ஆகும். இவை மனிதனுக்கு இன்றியமையாதவை. இவற்றைக் கடைப்பிடித்தொழுகினால் நல்ல வழி பிறக்கும். நல்ல வழி பிறக்க வாழ்வு மலரும்.




தயாரிப்பு குணம்

## பெண்ணைப் பற்றி...



பெண்களுக்கு ஓய்வு அதிகமாய்த் தேவைப்படுகிறது. இதில் தான் அவர்கள் பலவீனர்களே. தவிர ஆண்களை விடப் பெண்களுக்கு ஆயுள் அதிகம்.

**சக்தி**

பெண்களுக்கு உழைக்கும் சக்தி அதிகம். ஆளைப் பார்த்து குணத்தை எடை போடும் தன்மை ஆண்களை விட அதிகம். முகபாவத்தைப் புரிந்து கொண்டு மனதிலுள்ளதைக் கண்டறிந்து விடுவார்கள்.

**பெருமையும் சிறுமையும்**

பெண்கள் ஒரு விஷயத்தைப் பற்றிச் சட்டென்று முடிவு செய்வது இல்லை. முடிவு செய்து விட்டால் எளிதில் மாற்றிக் கொள்வது இல்லை. ஆண்களை விடப் பெண்கள் தான் அதிகம் பேசுகிறார்கள். பெண்கள் சீக்கிரம் ஆத்திரம் அடைந்து விடுவார்கள்.

**கண்ணீருக்கு**

பெண்கள் தங்களுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வது இல்லை. அதனால்தான் அவர்களுக்கு "சட்"டென்று அழுகை வந்து விடுகிறது. அவர்கள் சுலபமாக அதைரியம் அடைந்து விடுகிறார்கள். ஆனால் பயமடைந்த இவர்களுடைய கையாலாகா தன்மையைப் புலப்படுத்துவதே கண்ணீர்.

## கீரைகள்

மக்களின் உணவுவகைகளால் மனிதருக்கு ஏற்படும் நோய்களை நீக்கிச் சுகத்துடனும் பலத்துடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்கலாம் என்பது வைத்தியர்களும், விஞ்ஞானிகளும் கண்ட முடிவாகும். உண்ணும் உணவுகளில் கீரைகளின் பங்கு எப்படிப்பட்டதென்பதை நன்கு ஆராய்ந்தால், குப்பையில் முளைக்கும் கீரைகளில் உள்ள மகத்துவத்தைக் காண ஆச்சரியமாகவும், அழியாத மருந்துப் பொக்கிஷமாக நமது கொல்லைப்புறக் கீரைவகைகள் செய்யும் வண்ணத்தையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

கீரைவகைகள் மக்களின் அன்றாட உணவுவகைகளில் மிகவும் அவசியமானது. அவைகளில் மலிதமான உலோகச் சத்துக்களும், தேகவளர்ச்சிக்கான சத்துக்களும் நோய்களைத் தடுக்கும் மருந்துவகைகளும் அடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவை மலிவில் கிடைக்கக்கூடியதும், பணக்காரன் முதல் பாமரர் வரையும் பயனளிக்கக்கூடியதுமாகக் கீரைகள் இருப்பதையும் நாம் அங்கு ஆராய்ச்சியால் அவற்றின் மகத்துவத்தைக் காண்போமாக.





உடலுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய உயிர்ச் சத்துகள், கல்சியம், சோடியம், குளோறின், அயன், பொன் முதலிய உலோகச் சத்துக்களும் கீரையில் நிறைந்திருப்பதைக் காணலாம்.

## மனித வாழ்வில் மாணிக்கம்

கீரையிலுள்ள உப்புச்சத்தானது நாம் உண்ணும் மற்ற உணவுகளிலுள்ள புளிப்பை மாற்றி இரத்தச் சுத்தியைக் கொடுத்து குடலுக்கும் சீரண உறுப்புகளுக்கும் இதம் செய்கின்றது. கீரைகளில் உயிர்ச்சத்துக்களும் ஏ, பி, சி என்பன அடங்கியிருப்பதால் சொறி, கரப்பன், சிரங்கு, தேமல், குஷ்டம் முதலிய சரும வியாதிகளையும் நீக்கி உடல் அழகைக் கொடுக்கும் தன்மை கீரையில் உண்டு என்பதை யாவரும் மறுக்க முடியாது.

கீரையில் சர்க்கரைச்சத்து இல்லாதிருப்பதால் நீரழிவு வியாதியுள்ளவர்களும் அன்றாட வாழ்வில் கீரையைத் தாராளமாக உபயோகிக்க வழியாகின்றது. தேகம் வெப்ப நிலையிலுள்ளவர்கள் கீரையைச் சாப்பிடுவதால் கீரையிலுள்ள மருத்துவ நீர்ச்சத்து தேகத்திலுள்ள வெப்பத்தைக் குறைத்து தேகம் குளிர்ச்சிபெறவும் மனத்துக்கு இன்பமான சூழலையும் அளிக்கவல்லதாக அமைந்துள்ளதை உணர்வார்கள்.

உலக பந்தபாசங்களை நீக்கி இத் தன்னந்தனியராக காடு நோக்கிச் சென்று தவம் செய்யும் யோகிகளும் சந்நியாசிகளும் காய்ந்த இலைகளைப் புசித்துப் பலகாலம் யோக நிலையில் நோய் நொடியற்ற தெய்வீகப் பெருவாழ்வுக்கு வழிசெய்யும் வகையைச் செய்யக்கூடியதாகக் காய்ந்த இலைகளே இருக்குமானால் பச்சிலைகள் எவ்வளவு மகத்துவமானது என்பது சொல்லாமலே விளங்குமல்லவா.

ஆகவே இப்படியான மகத்துவம் பொருந்திய கீரையின் வகைகளையும் அவற்றிலுள்ள சத்துக்களையும் ஒவ்வொருவகைக் கீரையும் நீக்கக்கூடிய வியாதிகளையும் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம் என்பதற்காகவே இவற்றை வகைப்படுத்தி எழுத முற்பட்டேன். ஒவ்வொரு வகைக் கீரையையும் தனித்தனி ஆராய்வோம்.

### முருங்கைக்கீரை

முருங்கைக்கீரை இலகுவாகவும் எங்கும் எல்லோராலும் பெறக்கூடியதாகவும் உள்ளது. இதனை எல்லாரா

(10ம் பக்கம் பார்க்க)

சித்தவைத்தியர்

— க. சிற்றம்பலம் —

## தேங்காய் அலுவா

**தேவையான பொருட்கள்**

தேங்காய் — 1
சீனி — 1 ரூ'
வனிலா, கலர் சிறிதளவு
முந்திரிகைப்பருப்பு-25

**செய் முறை:-**

ஒரு பாத்திரத்தில் சீனியைக் கொட்டி சிறிதளவு நீர் விட்டு பாகு காச்சவும் பாகு பதமானதும் திருவிய தேங்காய்ப் பூவை கொட்டிக் காச்சவும். சிறிது நேரத்தின்பின் சிறு துண்டுகளாக்கிய முந்திரிகைப் பருப்பு, கலர் வனிலா, ஆகியவற்றையும் போட்டு நன்கு கலந்து இறுகியதும் இறக்கி நெய் பூசிய பலகையில் கொட்டி விரும்பிய வடிவங்களில் வெட்டிப் பரிமாறலாம்.

## கீரைகள்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

லும் பெறக்கூடியதாக உள்ளது. இக்கீரையில் நிரம்பிய கண்ணச்சத்துகள் இருப்பதை யாவரும் உணர்வர். உலோகசத்துக்களும் பொஸ்பரசும் நிரம்ப அடங்கியிருக்கின்றது. வாசநோயாளர்கள் சர்மரோகம் உள்ளவர்கள் இதை உண்பது நலமாகும். கண்பார்வையை அதிகரிக்கச்செய்யும். ஆனால் உடல்வலம் குறைந்தவர்கள் அதிகம் சாப்பிடுதல் கூடாது. ஆகவே உணவுடன் வைத்துக் குத் தேவைநிலைக்கும் ஏற்றவாறு உண்ணலாம். வாத நோயாளர்களுக்கு முருங்கையிலைப்பத்தியத்துடன் உணவு கொடுப்பதும் உண்டு. முருங்கையிலை நிரம்பிவுக்காரர் நிதந்தோறும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இதனால் சிறுநீரிலுள்ள சர்க்கரை தன்மை குறையும்.

### அறக்கீரை

இது எங்கும் கிடைக்கும் ஆனால் நாம் உபயோகத்துக்குப் பெரும்கீரை சுத்தமான இடத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் இயற்கைநேரடியாகக் கொடுக்கும் பொருட்கள் எல்லாம் சுத்தமாகவும் புனிதமாகவும் இருப்பது வழக்கம் ஆனால் குழலுக்கேற்ற அதன் பரிசுத்தம் மாற்றமடைகின்றது. ஆகவே கீரைகளையாம் உணவு தயாரிக்கும்பொழுது சுத்தமாகப்பெற்றுக் கொள்ள வேண்டும். நன்கு துப்பரவு செய்து தண்ணீரில் பலமுறை அலசி எடுத்தல் அவசியம். அறகீரை சிறுகுழந்தைமுதல் வயோதிபர்வரைப் பூரணமாக உண்ணக்கூடியது. சவித்தன்மையுள்ளவர்களுக்கு சிறந்த உணவு. பைத்தியத்தை நீக்கும் வல்லமை இக்கீரைக்குண்டு. உடலுக்கு குளிர்ச்சியைத்தரக்கூடியது. சீவசத்துகள் ஏ, சி நிரம்ப உண்டு.

### அகத்திக்கீரை

இதுவும் எங்கும் சுலபமாக கிடைக்கக்கூடியது. நிரம்பிய கண்ணச்சத்துக்கள் உண்டு. வாய் அவியல் உள்ளவர்கள் இக்கீரையில் சதிசமைத்து உண்டால் மூன்றே நாட்களில் பூரணசுகம் பெற்றதை எனது அனுபவமூலம் கண்டிருக்கிறேன். வெட்டைச்சூடு உள்ளவர்கள் ஒவ்வொரு கிழமையும் கண்டிச் சாப்பிடுவார்களால் சுகம் காணலாம். மலேசாதரம், நீரடைப்புமுதலிய நோய்களைப் போக்கவல்லது. ஆனால் நோயவி சுகதேகிகளாக இருக்கும் காலங்களில் அகத்திக்கீரை சாப்பிடுவது நல்லதல்ல.

## பேராட்ட...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறித்துப் பார்த்தான். 'நீங்க மறந்திட்டீங்க உங்களை எனக்குப் பொருத்தம் பார்த்தார்கள் ... ... கடைசி நேரத்தில் நீங்கமாட்டேன் என்றுவிட்டீங்கள் ...'

'அதெல்லாம் பழையகதை பாக்கியம். நடந்துபோனவைகளை நினைச்சு வருந்தி என்னபயன் ... நடப்பவற்றைப் பார்'. கணபதிப்பிள்ளைமாஸ்ரர் மீண்டும் வெற்றிலையைப் போட்டுக் கொண்டார் 'என்னைக ஒருத்தரையும் இன்னமும் காணவில்லை. மழை விடுகிறதாயுமில்லை ... நான் வரப் போகிறேன் ... கனநேரம் இருந்திட்டேன் ... நீ சமைக்கவும் வேணும் — என்றுஎழுந்தார்.

"இந்த மழையுக்கை போகப் போறியளே?..."

"குடை இருக்குத்தானே...?"

மாஸ்ரர் வேட்டியைமடித்துச் 'சண்டிக்' கட்டாகக் கட்டிக் கொண்டார். செருப்புகளையும் கைகளில் தூக்கிக் கொண்டார். குடையை விரித்துக்கொண்டு முற்றத்தில் இறங்கினார்,

"இதோபார், பாக்கியம்... இந்தச் செருப்புக்கள் சில வேளைகளில் நம்மைத் தூக்குகின்றன... சிலவேளைகளில் நாமும் அதைத் தூக்க வேண்டியிருக்கும்... ஒன்றுக்கும் கவலைப்படாதை...நான் வாறன்..."

அப்போது படலையைத் திறந்துகொண்டு சண்முகநாதன் ஓடிவந்து புகுந்தான் கை கிழிந்த சேட்டொன்றைச் சண்முகநாதன் அணிந்துகொண்டான். ஆஸ்பத்திரிக்கு நேரமாகிவிட்டது.

'அம்மா...' என்று அழைத்தான்.

"என்ன?" என்று வேண்டா வெறுப்பாகப் பதில் வந்தது.

"சாப்பாடு கட்டிப் போட்டீயளே? நேரமாய்ப் போச்சு...'

"இந்த மழையுக்கை என்னத்தைச் சமைக்கிறன்?..." சண்முகநாதன் துடிதுடித்துப் போனான். வேகமாக வெளியே ஓடிவந்தான்.

"அப்ப... இன்னும் சமைக்க வில்லையா. அம்மா? அரிசி இருந்ததே... முருங்கைக்காய் புடுங்கி வைச்சிருந்தேனே?... இவ்வளவு நேரமும் என்ன செய்தியள்?

"எனக்குச் சுகமில்லைடா... குளிர் ஒழுகுது — ஆர் அந்தச் சேற்றுக்கை போறது...? பாணை வாங்கிச் சாப்பிடுங்கோ... இரவைக்குச் சமைப்பம்..."

சண்முகநாதனின் உடல் மெதுவாகப் பற்றியது. எவ்வளவு இலகுவாகக் கூறிவிட்டாள், அவள் அறியாத்தக்கதாக எந்த ஒரு தாயும் இவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. சில கண நேரங்கள் தாயையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மறுகணம் ஏதோ நினைவு வந்தவனாகப் படலையைத் திறந்துகொண்டுவெளியேறினான்.

மழை தூறிக் கொண்டிருந்தது இடையிடையே மின்னல்களும் அடிவானிலோடு தெறிப்பினந்தன. (வளரும்)

# இலக்கியத்தில் பால் தரும் இனிமை மிகு உவமைகள்

வ. குகசர்மா

பண்டைய காலத்திலே பசுக்கள் நாட்டின் செல்வமாகப் போற்றப்பட்டன. ஞானசம்பந்தரும் தமது தேவாரத்தில் 'வாழ்க ஆனினம்' என்று பாடினார். அக்காலத்தில் மாத்திரமல்லஇக்காலத்திலும் பசுக்கள் நாட்டின் செல்வத்திற்குக்காரணமாய் விளங்குவதை நாம் காண்கிறோம். அவ்வாறு விளங்குதற்கு வேறுபல காரணங்கள் இருந்தாலும் அவற்றில் இருந்து பெறப்படும் பாலே பிரதான காரணமாகும்.

### சிறந்த உணவு

பசும்பாலே பூரணசத்துக்கள் நிறைந்த உணவு என்பது வைத்தியநிபுணர்களின் அபிப்பிராயம். பசும்பால் குழந்தைகளின் சிறந்த உணவாக விளங்குகின்றது. வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதநிலம் என்று கூறப்படும், அந்த நிலத்திலே வாழும் இருவர் அழகிய சிறுதேர்களை உருட்டி விளையாடுவார்கள். அதனால் அவர்கள் களைப்படைந்தார்கள் அவர்களுடைய களைப்பினை ஏற்பட அடுத்தபிற செவிலித்தாய்மார்கள் பாலைக் குடிக்கச்செய்து கட்டிலில் தூங்கச் செய்வார்கள். "வாச நற்றேர் உருட்டிய புதல்வர் தளர்நடை வருந்தம் வீட அவர்முலைச் செவிலி அம்பெண்டிர்த் தழீஇப் பால் ஆர்ந்து அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்" எனத் 'திரையன்' என்னும் அரசனின் நாட்டுச் சிறப்பைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துப்பேசுகிறது. பசுக்களையும் எருமைகளையும் பாதுகாத்தவர்களைப் போர் கோவலர் என அழைக்கப்படுவர். அவர்கள் வாழ்க்கைமுறை சிறந்தது, நிலையற்றது. "கோவலர் வாழ்வோர் கொடும் பாடிக்கே" எனச் சிலப்பதிகாரம் விதந்துபேசும். அவர்களின் செல்வம் பாலேயாகும். 'மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின் மகத்தின மூரல் பாலொடும் பெறுகுவிர்'' என்பது பெரும்பாணாற்றுப்படை.

### இனிமை

பால் இனிமையான உணவு. எனவே இனிமை பயக்கும் சொற்களுக்கும் உவமையாக்கினர் புலவர். 'பால் போலும் இன்சொற் பவளம் போல் செந்துவர் வாய்மை" என்னும் பாவடி அதற்கோர் உதாரணம். பாலின் இனிமைக்காகவே பலர் அதை விரும்பினர். அந்த விருப்பத்தைப் பயன்படுத்தி தமது காரியத்தைச் சாதிக்கமுயன்றார்கள் பலபேர். திருஞானசம்பந்தர் ஓர் இறையன் அடியார்; இறைவனது திருநாமத்தை யார் சொன்னாலும் அவர் உள்ளம் உருகுவார். இனி சொல்லைச் சொல்லும் தன்மையுடையது. அந்தக் கிளியை அழைத்து அவர் சொல்கிறார்.

"இறையாரும் மடக்
கிளியே இங்கேவா
தேனொடு பால் முறையாலே
உணத்தருவன்......
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகால்
பேசாயே"

சிவனை அழைத்துத் தரும்படி செவிலித்தாயை வேண்டுகின்றான் குணமாலை. அப்போது செவிலிக்கு சில பொருள்களை அதற்குப் பிரதியுபகாரமாகத் தருவதாகக் கூறுகிறான்.

"பாலனியும் பூவும்
புழுகையும் பொசிந்தும்
காலணிமாப்பொன்விளக்கும்
தந்தும்மைக்
கைதொழுவேன்"

என்பது குணமாலை கூற்று.

### பாலின் வெண்மை

பாலின் வெண்மை நிறம் பலவற்றிற்கு உவமையாக்கப்பட்டுள்ளது சந்திரன் களங்கமில்லாமிடத்து பாலின் நிறத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது. 'பால் வெண்பதி சூடி பாலத்தோர் பெண் கற்று' என்பது தேவாரம். பாலனுமிக் இக்கள் தோய் முத்தமாலைப் பழிப்பில் நெடுங்குடைக்கீழ்' என்பது சிவகசிந்தாமணி. களங்கமற்ற வெள்ளைக்கு பாலை உவமையாக்கினார் சிவகசிந்தாமணி ஆசிரியர். 'பாற்பரந்தன்ன பட்டார் பூவணை பசும்பொற் கட்டில்' என்பது ஆசிரியர் காட்டும் உவமை. பால் காய்ச்சும்பொழுது எழும் ஆவியும் வெண்மையென்று புலவர் கருத்து. 'பாலாரவிப் பைந்துகிலேந்தி' என்பது அவர் வாக்கு. 'அவியன்ன அவிர் நூற் கலிங்கம்' என்பது பெரும்பாணாற்றுப்படை. பாற்கடையும்போது திரளும் துளிகள் வெண்மையும் சிறப்புமுடையன. வெண்மைகொண்ட வீடு இனை அணிந்திருக்கின்றவரும் ஆன்மாக்களுக்கு இன்பத்தையே அளிக்கவல்லவராகிய இறைவனுக்கு அந்தச் சிதறும் துளிகளை உவமையாக்கினர் அடியார். 'பாலுந்துறு திரளாயின பரமன்' என்பது தேவாரம்.

### பாலும் அன்னமும்

பாலொடு கலந்த நீரும் பாலாகும். அதுபோல நல்லோர்களோடு கலக்கும் ஏனையோரும் நல்லோர்களாவர். ஆனால் அன்னப்பறவைக்கு பாலையும் நீரையும் கலந்துவைத்தால் பாலைமாத்திரம் குடித்து நீரைவிட்டுவிடும். அன்னத்தின் இச்சிறந்த குணத்தாலே நன்மாணுக்கரை அன்னத்திற்கு உவமை கூறுவர் பவணந்தியார். தாம் கற்றவற்றில் தேவையானதைக் கவர்ந்து கொண்டு எஞ்சியதை அன்னம் நீரை விலக்கும் தன்மை போல விலக்கிவிடுவர் நன்மாணாக்கர். 'நீர் பிரித்தன்ன ஞானத் தூயதிம் பாற் போற் கொள்க சுந்தரன் சரிதம் தன்னை' என்பர் பரஞ்சோதி முனிவர்.

### பாலில் சகுணகுணமும் இறைவனும்

கோவலர் தம் குடத்திலே உறையிட்டுவைக்கும் பால் உறைபாலாகிவிடுவதையும் இடமத்தின் கண்ணீர் சோருதலும் உறியில் இருக்கும் வெண்ணெய் உருக்குப்படாமல் தானே உருகுதலும் ஆகிய இவற்றைத் துர்ச்சகுனமாகக்கொள்வர்.

'குடப்பால் உறையா குவி
யிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும்
வருவதொன்றுண்டு
உறிநறு வெண்ணெய்
உருகா உருகும்
மறிதெறித் தாடா
வருவதொன்றுண்டு'

என்னும் சிலப்பதிகாரச் செய்யுள் இவ்வுழக்கத்தை எடுத்துக்கூறும்.

பாலில் நெய் மறைந்திருக்கும் தன்மைபோல இறை

(11-ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யாமல், தற்சமயம் செய்யநினைத்ததன் காரணம் என்ன?" என்றேன்.

"அன்று மணவாழ்வில் விருப்பம் இல்லாதிருந்தேன்! ஆனால் இன்று மணவாழ்வு வெறுப்பாகத்தெரியவில்லை. மானிடமனத்தின் விந்தை இதுதான். உதாரணமாக ஒருமுறை காதலில் தோல்வி கண்டவர்கள், உடனடியாக வாழ்வே அவ்வளவுதான் என நினைப்பர். காலப்போக்கில் முதற்தோல்வியை மறந்து மறுமுறையும் காதலில் ஈடுபடுகிறார்கள். மனித மனம் நேரத்திற்கு ஒருநிறம் காட்டும் வானத்தைப் போன்றது" என்றாள் என் வாழ்வுக்கு வழிவகுத்த சித்தனைச் சிற்பி.

என்றோ என் இதயத்தில் மடிந்துவிட்ட என் எண்ணம் அலைபாயத் தொடங்கிவிட்டது நானும் யோகசாமரும்...

என்திரைமாகயோகிக்கிறீர்கள் நான் கூறியதிலும் நியாயம் உள்ளதுதானே! ஒருமனித விருப்பு வெறுப்புகள் காலத்திற்குக் காலம் வேறுபடும் இயல்பின. என் வருங்கால கணவரே சிலசமயம் மனம்மாறி என்னை வெறுத்தாலும் வெறுக்கலாம். அதனால் என்வாழ்வு அல்லமைமாகிவிடாதே. என்வாழ்வின் ஒருபக்கம் மூடிக்கொண்டதாகத்தான் இருக்குமேயொழிய என்வாழ்வு சூன்யமாகிவிடாது. தெய்வத்தின் விருப்பம் எப்படியோ அப்படித்தான் திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன" என்றாள்.

முதலில் உங்கள் கருத்துப் பிழைபோலத்தான் தெரிந்தது. ஆனால் தற்போது அது நூறுவீதம் பிழையான கருத்தாகத் தெரியவில்லை' என்று மனமார ஒப்புக்கொண்டேன்.

"பனிப் புகை ஓய்ந்தது. இனிமேல் வழமையான நிலவும்" என்று வானொலி அறிவித்தது. இனிமேல் அமைதிதான்" என்று புன்னகைத்தாள் விண்டா.

"ஆமாம்" என்று கூறி விடை பெற்றேன். "இனிமேல் அமைதிதான்' என்ற இரு சொல்லும் என்நெஞ்சத்தரளத்தில் மோதிப் பலமாக அதிர்ந்தன.

என் ஒரு வார்த்தைக்காகவே காலமெல்லாம் காத்திருக்கும் யோகசாகரரை நினைத்தேன். அமெரிக்கா விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அவர் என்னிடம் 7 வயதில் இணைவர். கடுகிச் சாம்பராகிவிட்டஎன்னத்தில் ஒருகுளிர்ப்பு. மனத்தில் புது மலர்ச்சி என் முகத்தில் புதியதோர் ஒளி பரவியது' (யாவும் கற்பனை)


## வட்டியுடன் பணமா?
## வட்டியுடன் பவுணு?

பவுணானல் வருடம் 6 சதவீத வட்டியுடன் பவுண் கொடுக்கப்படும்
பணமானல் வருடம் 8 சதவீத வட்டியுடன் பணம் கொடுக்கப்படும்

இத்திட்டத்தில் ஒருவர் ரூபா 5000/- வரை சேமிக்கலாம்

மறு விபரங்கட்கு

தம்பி அன் கோ,

284, காங்கேசன்துறை வீதி - 284, K. K. S. ROAD,

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



## மணிமொழி

மனிதனால் ஒன்றும் ஆகாது. நெப்போலியன் எவ்வளவோ திட்டங்கள் தீட்டினான். இறுதியில் சென்ற். ஹெலனாவில் கைதியாக வாழ்ந்தான் பலம்மிக்க ஜெர்மன் ஹெய்சர் ஐரோப்பாவின் முடியைப்பெற எண்ணினான். ஆனால் சாதாரண மனிதனாகவே வாழ்ந்தான் இவைகவு டவின் விருப்பமாகும். இது கடவுளின் தீர்ப்பு. எனவே, இந்த உதாரணங்களை மனதில் கொண்டு, நாமும் தாழ்மையாக இருக்க வேண்டும்.

— மகாத்மா காந்தி


வாழ்த்துக்கள்!

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

உரித்தாகுக.

துரித சலவைக்கு

மில்க்வைற் சலவைப் பவுடர்

வாங்கிப் பாவியுங்கள்.

மில்க்வைற் சோப்

தொழிற்சாலை

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


# இந்த ஊழியர்களுக்கு அந்தச் சலுகை இல்லை

கொழும்பு, சனி

ஒரு குறிப்பிட்ட காலம் வரை அரசாங்க சேவை புரிவதற்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஊழியர்கள் பதவியிலிருந்து முன்கூட்டியே ஒய்வுபெற்றுக்கொள்வதற்கு இருந்து வந்த வசதி ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது. இவர்கள் 55 வயதுவரை சேவை புரியவேண்டியிருக்குமென்று தெரிகின்றது.

பொதுநிர்வாகம் உள்ளூராட்சி உள்துறை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு மகாதேவா விடுத்துள்ள உத்தரவொன்றின்படி 55 வயதுக்கு மேற்பட்டும் சேவையில் நீடிக்கும் வகையில் ஒப்பந்தம் உள்ள ஊழியர்கள் ஒய்வு பெற வேண்டிய கட்டாய வயதிலேயே ஒய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தத்தின்கீழ் அவர்களுக்குரிய சலுகைகள் யாவும் வழங்கப்படும். கட்டாயசேவைக் காலத்தை நிறைவேற்றியுள்ள ஊழியர்களும் உடல் நலக்குறைவானவர்களும் முன்கூட்டியே ஒய்வுபெறுவது இதனால் தடுக்கப்படவில்லை. (நா)

## பலாலியில் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமன எம் பி எம் சி சுப்பிரமணியம், யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை, யாழ் கல்வி வித்தியாதிபதி டபிள்யு டி சி மகாதந்தில, யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே நல்லைநாதன், வட மாகாணப் பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம், கேணல் ரெட்டிக்கோ, யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா, மன்னாகம் கி ச தலைவர் வி பொன்னம்பலம், காங்கேசன்துறை ப ச தலைவர் இ குருசாமி, தெல்லிப்பழை கி ச தலைவர் எம் சிதம்பரநாதன், கல்வியங்காடு ச தலைவர் பி நாகலிங்கம், உடுவில் கி ச தலைவர் எஸ் முத்துலிங்கம், கோப்பாய் கி ச தலைவர் பரமானந்தராசா, திரு க ஜெயபாலசிங்கம் உட்பட வலிகாமம் வடக்கிலுள்ள கிராமசேவையாளர்கள் ஆகியோர் அமைச்சரை வரவேற்றார்கள்"

அமைச்சருடன் அமைச்சு அதிகாரிகளும் வந்திருந்தனர் அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்

## தினசரி சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 02 B 0767 | 06 D 0468 |
| 05 O 0800 | 04 L 0514 |
| 06 Q 0201 | |

தலா ரூ. 1 000 பெறும் 4 பரிசுகள்:-

| | |
|---|---|
| 11 N 0559 | 08 T 0282 |
| 04 K 0129 | 08 N 0700 |

தலா ரூ. 294 பெறும் 50 ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 11 W 0798 | 08 H 0621 |
| 02 O 0839 | 12 G 0839 |
| 14 F 0590 | 09 B 0882 |
| 15 X 0275 | 07 Q 0651 |
| 08 Y 0551 | 09 B 0916 |
| 01 Z 0161 | 11 T 0687 |
| 05 C 0035 | 01 K 0644 |
| 16 M 0433 | 09 N 0194 |
| 10 S 0140 | 06 S 0826 |
| 07 A 0348 | 11 B 0489 |
| 07 U 0600 | 05 A 0306 |
| 11 T 0590 | 05 V 0653 |
| 07 G 0418 | 04 M 0303 |
| 03 V 0533 | 05 I 0776 |
| 18 0210 | 10 G 0739 |
| 10 N 0079 | 06 T 0625 |
| 03 F 0359 | 11 T 0286 |
| 11 O 0476 | 04 W 0135 |
| 07 V 0425 | 05 Z 0921 |
| 06 L 0543 | 02 B 0701 |
| 10 M 0598 | 13 A 0538 |
| 10 M 0525 | 10 F 0427 |
| 06 G 0196 | 08 C 0395 |
| 01 H 0098 | 06 T 0606 |
| 10 H 0705 | 10 Q 0717 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

# தலைவர் தேரிவில் வாக்குவாதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை கிராம சபைத் தலைவர்கள் மகாநாட்டில் தலைவர் தெரிவின் போது சூடான விவாதங்கள் ஏற்பட்டது. உதவி அமைச்சர் திரு விக்கிரமசிங்காவின்பெயர் பிரேரிக்கப்பட்டபோது போட்டியாக மற்றொருவரின் பெயரும் பிரேரிக்கப்பட்டு அனுவதிக்கப்பட்டது. போட்டியாக பிரேரிக்கப்பட்ட அபேட்சகர் மேடையிலேறி தமக்குச் சம்மதமில்லை யெனத் தெரிவித்தார் இதைத் தொடர்ந்து ஒறுக்குப்பேச்சுகள் இடம்பெற்றதோடு, காரசாரமான விவாதம் நடைபெற்றது கடைசியில் உதவி அமைச்சர் திரு. விக்கிரமசிங்கா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் செயலாளராக முவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## யாழ்—கண்டி மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில், கண்டி கோஷ்டிக்கும், யாழ்ப்பாணக் கோஷ்டிக்குமிடையில் யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் இன்று பிற்பகல் 4 மணிக்கு உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவிருக்கிறது.

## தேசிய சுவீப்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 24-ந் தேதி தேசிய சுவீப் இழுப்பு யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெறவிருக்கிறது.

## நல்லூருக்கு விஜயம்

நேற்று அமைச்சர் பீலிக்ஸ் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்கும், ஸ்ரீநாகவிகாரைக்கும் விஜயஞ்செய்து வணங்கினார்.

# முன்னர் சொன்னதை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்ற கடந்த 18 மாத காலமாக முயன்றுவருகிறேன். கடந்த கிராமசபை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற முயற்சி எடுத்துவருகிறேன்.

5 வருடத்திற்கு ஒரு தடவை காணி விலைமதிப்பு நடைபெற்று வரிவசூலிக்கப்படும். இந்த வருடம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 1500 ரூபாவும் கிராமசபை வீதி 4 மைல் வீதிகளுக்கு 40 ரூபாவும் கொடுக்கப்படும் நீங்களும் இந்த முறையை ஏற்றுக்கொள்வீர்களென நம்புகின்றேன். முன்பு மந்திரிமார் அரசியல் ஆதரவின் பிரகாரம் கிராமசபைக்கு நிதி வழங்கப்பட்டுவந்தது. இனிமேல் அப்படி நடக்காது. சென்ற வருடம் கிராமசபைக்கு130 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 80 லட்சம் ரூபாவே செலவு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யு-ஆர். டி. பண்டாரநாயக்கா, உள்ளூராட்சி மன்றங்களின் வளர்ச்சிக்காக உதவிசெய்தார். அவர் கடைப்பிடித்த வழிகளைக் கையாண்டு வருகிறேன் நீங்கள் நேர்மையாக என்னுடன் ஒத்துழைக்கவேண்டும்; யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் மங்கள விளக்கேற்றி மகாநாட்டை ஆரப்பித்துவைத்தனர்.

யாழ் மேயர் திரு துரையப்பா பேசும்போது கூறியதாவது: 1951-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த கிராமசபைத் தலைவர்கள் மகாநாட்டிற்கு காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்கா தலைமை தாங்கினார். 20 வருடத்திற்குப் பின்னர் மீண்டும் யாழ். நகரில் நடக்கும் இம்மகாநாட்டில், அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கலந்துகொண்டார். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா இக்காதகுறையை அமைச்சர் பீலிக்ஸ் தீர்த்துவைத்துள்ளார்.

இதுவரைகாலமும் சிலரின் பிரசாரத்தில் யாழ்.நகரைப் பற்றி சில சமயம் தவறான எண்ணம் வைத்திருந்தாலும் இன்று நேரில் பார்த்து அந்த தப்பபிப்பிராயத்தைத் தீர்த்துக்கொள்ளுங்கள், நீங்கள் அடிக்கடி வடபகுதிக்கு வந்து போகவேண்டும். அப்பொழுதான் சிங்கள-தமிழ் நல்லுறவு வளர்வதோடு தேச ஐக்கியமும் ஏற்படும்.

இலங்கையில் எல்லா மக்களும் வித்தியாசமின்றி சமமாக வாழவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர் அமைச்சர் பீலிக்ஸ். அவரின் நிர்வாகத்தின் கீழ் நேர்மைக்கும், சேவைக்கும் நிறைய இடமுண்டு.

யாழ். மாவட்ட கிராம சபைத் தலைவர்கள் சங்கத் தலைவர் திரு வ பொன்னம்பலம் வரவேற்புரை நிகழ்த்தும்போது, தமிழர் சிங்களவர் மத்தியில் கலை, கலாசார ஒற்றுமைகள் உண்டென்றும் அவற்றைவளர்க்கவேண்டுமென்றும்கூறினார்.

திரு டி பி விக்ரமசிங்கா தலைமை உரையின்போது கிராமசபைகளின் தேவைகளைப்பற்றி வலியுறுத்தினார். நீர்ப்பாசன மின்சார உதவி அமைச்சர் திரு ஜே எம் சேமரத்தின மின்சார உதவியில்லா கிராமசபைகளுக்கு மின்சாரம் வழங்குவதில் அக்கறை எடுக்கவேண்டுமெனக் கூறினார்.

## நல்லுறவு வளர மேயர் தெரிவித்த யோசனை

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு ஆர் பரமானந்தராசா, பிரேரணைகளைச் சமர்ப்பித்தார். அவரைத் தொடர்ந்து மற்றும் சில உறுப்பினர்கள் பிரேரணைகளைச் சமர்ப்பித்தனர்.

கூட்டம் ஆரம்பம் முதல் கடைசிவரை சிங்களம்-தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெற்றது.

வரவேற்பு நடந்தபின்னர் தலைவர் திரு விக்ரமசிங்கா அமைச்சர் பண்டாரநாயக்காவை பேசும்படி அழைத்தபோது. நிகழ்ச்சிகள் முடிந்தபின் கடைசியாகப் பேசுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கிராமசபைத் தலைவர்களுக்கு யாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பா மதியபோசன விருந்தளித்தார்.


ஈழநாடு

விரோதிகிருது வருடம் தை மாதம் 2-ம் திகதி (16—1—72)


## நமது முற்போக்கு!

இன்று மாட்டுப்பொங்கல்! நேற்று தை(சின)ப் பொங்கல்! நாளை கன்றுப்பொங்கல்!

தமிழரின் தலையாய இப்பெருநாட்கள், அவர்களுக்கு கால்நடைகள்மீதிருந்த அன்பையும், சமூகத்திற்கு அவற்றின் முக்கியத்துவத்தையும் காட்டுகின்றன.

முன்காலத்தில் தமிழரின் குடும்பங்கள் அநேகமாக எல்லாவற்றிலும் பசுக்களும் கன்றுகளும் அழகுசெய்து, கிராமமே செழித்திருக்கும். வீட்டிலேயே வேண்டிய பால், தயிர், வெண்ணெய் முதலியன தப்பாமல் கிடைக்கும். ஆகவே குழந்தைகளும் குடும்பத்தாரும் தேகசுகத்துடன் வாழமுடிந்தது. எருதுகள் நிலத்தை உழுவதற்குப் பயன்பட்டன. எதுவுக்கும் குறைவில்லை.

ஆனால் இன்று நமது முற்போக்கு நாகரிகம் எவ்விதமுள்ளது? கால்நடைகளையெல்லாம் கசாப்புக் கடைகளுக்கு விற்று அழித்துவிடுகிறோம். பால்மாவுக்காகவும், எருக்களுக்காகவும், டிராக்டர்களுக்காகவும் பிறநாடுகளை எதிர்பார்த்து ஏங்கி, நம் செல்வத்தையெல்லாம் வெளியேற்றுகிறோம். கிராமக் வாழ்வு நைந்து ஏழ்மையில் தவிக்கின்றது.

இக்காலத்தில் கால்நடைகளுக்கான பிண்ணாக்கு, வைக்கோல், தீன் முதலியன உள்நாட்டில் கிடைப்பதாயினும், அவற்றின் விலைகள் மிக அதிகரித்து. குடும்பத்திலே பசு வளர்க்கமுடியாதபடி தடுக்கின்றன. மேய்ச்சலுக்கான இடம் ஒதுக்கப்படவில்லை.

மீண்டும் கிராமங்களும் நாடும் செழிக்கவேண்டுமாயின், அரசாங்கம் பசுக்களையும் கால்நடைகளையும் வளர்ப்பவர்களுக்குக் கூடிய உதவிகளையும் ஆதரவையும் அளிக்கவேண்டும். அவற்றை அழிப்பதைக் கடுமையாக தடுத்தாலே, அச்செல்வம் பெருகவும் நாட்டுமக்கள் மீண்டும் பிறநாடுகளை எதிர்பாராமல் சுபிட்சமாக முன்னேறமுடியுமாக இருக்கும்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.